வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 07.09.2023 வியாழக்கிழமை இதழ் : 271 பக்கங்கள் : 16

# பத்திரிகையாளர் லசந்தவை சுட கோட்டாபயவே உத்தரவிட்டார்!

## சனல் - 4 ஆவணப் படத்தில் ஆஸாத் தெரிவிப்பு

லண்டன், செப். 07

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங் கவை சுட்டுக் கொல்லுமாறு கோட்டாபய ராஜபக்ஷவே எம்மிடம் கூறினார் என்று சனல் -4 ஆவணப்படத்தில் ஆஸாத் மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்கு தல்களின் பின்புலம் தொடர்பான ஆவணப்படத்தை பிரித்தா னியாவின் 'சனல் 4' தொலைக் காட்சி வெளியிட்டது. இந்த காணொலி இலங்கையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி யுள்ளது.

'சனல் 4' வெளியிட்டுள்ள 11

## சனல் - 4 தொலைக்காட்சிக்கு நன்றி தெரிவித்த கர்தினால்!



கொழும்பு, செப். 07

உயிர்த்த ஞாயிறு தாக்குத லின் பின்னணியில் உள்ள சதித் திட்டம் மற்றும் அதில் ஈடுபட் டனர் என்று கூறப் படும் நபர் களை வெளிப்படுத்தும் பிரித் தானி யாவின் 'சனல் 4' செய்தித் திட்டத்துக்கும், அதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் நேற்றுக் கூறினார்.

பொரளை பேராயர் மாளிகையில் 11

## மாலை வரை கூட இருந்துவிட்டு மைத்திரி கழுத்தறுத்துவிட்டார்!

### தயாசிறி ஜயசேகர எம். பி. சாடல்



கொழும்பு, செப். 07

பாராளுமன்றத்தில் மாலை 4 மணிவரை நானும் கட் சித் தலைவரும் (மைத் திரிபால சிறிசேன) ஒன்றா கவே இருந்தோம். கலந்துரை யாடலில் ஈடுபட்டோம். ஆனால், இரவில் என் கழுத்தை அறுப்பார் (பதவி நீக்கம்) என நினைக்கவில்லை. பொதுச் செயலாளர் பதவியை விட்டுக்கொடுக்குமாறு கட்சி தலைவர் கோரி இருந்தால் அதனை செய்திருப்பேன்.

- இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும் உறுப்பினர் பதவியில் இருந் தும் நீக்கப்பட்ட தயாசிறி ஜயசேகர எம். பி. தெரிவித்துள்ளார். 11

# தனிநாடு கோரும் தகுதியை தமிழினம் வளர்க்க வேண்டும்!

## விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 07

நிர்வாகம் சீர்குலைந்த இனம்தான் சமஷ்டி வேண்டும் - தனி நாடு வேண்டும் என்று கேட்கிறது. எங்களுடைய கடமைகளை நிறைவேற்ற முடியாதவர்கள் தனிநாடு பெற்றோ அல்லது சமஷ்டி பெற்றோ நடத்த முடியாது. அதற்கேற்றவாறு நாங்கள் எங்களை இப்போதே மாற்ற வேண்டும் - இவ்வாறு கூறியுள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான க. வி. விக்னேஸ்வரன்.

நேற்றைய தினம் அவரை ஐ. நா. வதிவிட பிரதிநிதி மார்க் அன்ட்ரூ விக்னேஸ்வரனின் இல் லத்தில் சந்தித்தார். இந்த சந்திப்பு தொடர்பில் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தபோது அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் பதில ளித்தார். இதன்போது கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், அரசியல்வாதிகளுக்கு திணைக் களங்களில் இருப்பவர்கள் தங்கள் கடமையை விட்டு வெளிச் சென்று உதவுகின்றனர். 11

## சமுர்த்தி பணியாளர் என்றுகூறி நகைகள் பறித்தவர் கைதானார்!

யாழ்ப்பாணம், செப். 07

சமுர்த்தி உத்தியோகத்தர் என்று கூறி நகைகளை பறித்தவர் உட்பட இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து மேலும் அறிய வருவதாவது, சுன்னாகத்தில், சமுர்த்தி உத்தியோகத்தர் என்று தன்னை அறிமுகம் செய்து வீதியால் செல்வோரிடம் உதவித் திட்டம் தருவதாகப் பேசி நகைகளை பறித்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரால் பறிக்கப்பட்டவை என்று கூறப் படும் 10 பவுண் நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 11



வரலாற்று பிரசித்தி பெற்ற பொன்னாலை வரத ராஜப் பெருமாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றபோது...

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் விரைவில் மாற்றப்படுவார்

### விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 07

வடக்கு மாகாண ஆளுநர் வெகு விரைவில் மாற்றப் படுவார் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி நேற்றைய தினம் யாழ்ப் பாணத்தில் விக்னேஸ்வரனை சந்தித்துப் பேசினார். விக்னேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு 11

## 3 மாதங்களில் மட்டும் 22 பேர் சுட்டுக் கொலை!

கொழும்பு, செப். 07

கடந்த 3 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் நாடளா விய ரீதியில் 42 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவா கின. இவற்றில், 22 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயம டைந்துள்ளனர்.

குற்றவாளிகள் தொடர்பில் சரியான தரவு முறைமை இன்மையே குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணம். அடுத்த 3 மாதங்களுக்குள் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த விசேட வேலைத் திட்டமொன்று அமுல் படுத்தப்படும் எனவும் மேல் மாகாணத்துக்கு பொறுப் பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதி பர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை கட்டுப் படுத்துவதில் பொலிஸாரின் வகிபாகம் எனும் 11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி இன்றும் அகழ்வு பணி தொடரும்!

முல்லைத்தீவு, செப். 07

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ் வுப் பணிகள் இன்று வியாழக்கிழமையும் தொடரும் என்று முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி கள் நடைபெற்றன. நேற்றைய தினம் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

இப்போது நாடுமுழுவதும் பேசப் படுகின்ற விடயம் என்ன என்பது நீங்கள் அறிந்ததுதான். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து பிரித் தானியாவின் சனல் –4 தொலைக் காட்சி வெளியிட்ட ஆவணப்படம் பற்றியே நாடு முழுவதும் இப்போது பேசப்படுகின்றது.

அந்த ஆவணப்படம் ஓகஸ்ட் மாதம் பதினைந்தாம் திகதி முதலில் ஒளிபரப்பப்படவிருந்தது. அதில், தெரிவிக்கப்பட்டிருந்த முக்கிய விடயம் ஒன்று தொடர்பாக எழுப் பப்பட்ட முறைப்பாட்டையடுத்து அது ஒளிபரப்பப்படுவது தாமதமாகிய போது அதுபற்றி இந்தப் பத்தியில் எழுதியிருந்தது வாசகர்கள் மறந் திருக்க மாட்டார்கள்.

பிள்ளையான் என்று அறியப் பட்ட சிவநேசதுரை சந்திரகாந்த னின் பிரத்தியேக செயலாளராகவும் ஊடகச் செயலாளராகவும் இருந்த ஆஸாத் மௌலானா வழங்கிய தகவல்களை ஆதாரமாக வைத்து அந்த ஆவணப்படம் தயாரிக்கப் பட்டிருந்தது. அது ஒரு சனல் – 4 இன் தயாரிப்பு அல்ல. அது தனியார் தயாரிப்பு நிறுவனம் ஒன்றின் தயாரிப்பு.

சனல் – 4 ஏற்கனவே, பல ஆவ ணப்படங்களை இலங்கையை மையப்படுத்தி வெளியிட்டிருக் கின்றது. உதாரணமாக பிரபாகர னின் இளைய புதல்வர் பாலச் சந்திரன் படையினரால் படுகொலை செய்யப்பட்டாரெனக் குற்றஞ்சாட்டி வெளியிடப்பட்ட ஆவணப்படம் அதில் முக்கியமானது. அதில் முதலில் பாலச்சந்திரன் உயிருடன் படையினர் வசம் இருக்கின்ற படமும் – அவர் படுகொலை செய் யப்பட்ட பின்னர் எடுத்த படத்தையும் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி யது. அதனை மறுக்க முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால், நேற்று வெளியிடப்பட்ட இந்த ஆவணப்படம் பிள்ளையா னின் உதவியாளர் வெளியிட்ட தக வல்களை மட்டுமே ஆதாரமாக கொண்டு வெளியிடப்பட்டுள்ளது. இரண்டு தசாப்தமாக பிள்ளையானு டன் இருந்த ஒருவர், அவரின் அத்தனை நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்ட ஒருவர் இப்போது சொல்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதா என்பது தெரியவில்லை. பிள்ளையான் பற்றி அவர் சொல் கின்ற விடயங்கள் ஏற்கனவே நாம் அறிந்தவைதான்.

ஆனால், இந்த ஆவணம் முழுவதும் இலங்கையின் தேசிய புலனாய்வு சேவையின் இயக்கு நராக இருக்கும் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயைச் சுற்றியே கூறப்பட்டுள்ளது.

அவரே முழுக்க முழுக்க இந்த தாக்குதலின் பின்னாலிருந்த ஒரு வர் என்பது போலவும் ராஜபக்ஷக் களை மீண்டும் ஆட்சியில் அமர்த்து வதற்காகவே அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் ஆஸாத் மௌலானா அந்த ஆவணப்படம் முழுவதும் பேசுகிறார்.

இதற்கு முன்னரும் இதுபற்றி எழுதியபோது ஆஸாத் மௌலானா எப்படி பிள்ளையானின் உதவியா ளராக வந்தார். அவரோடு அவரது நிழல்போல செயல்பட்டார் என்று எழுதியிருந்தேன்.

அவர் தனக்கும் பிள்ளை யானுக்கும் இடையேயான உறவு பற்றியும் தானே அவரின் நம்பிக் கைக்குரிய ஆளாக இருந்தது பற்றியும் விவரித்திருப்பதால் அவரின் சொல்லுக்கு பெறுமதி சேர்ந்திருக்கிறது.

அதில் அவர் சொல்கின்ற சில விடயங்கள், உதாரணமாக பிள்ளை யானின் ஆட்களுக்கு அரசாங்கம் மாதாந்தம் பணம் வழங்கியது போன்றவை உண்மையானவையா கக்கூட இருக்கலாம். ஆனால், அவர் இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு ஜனவரி மாதம் புத்தளத்தில் வைத்து குண்டுதாக்குதல் பிரதான குற்றவாளியான சஹ்ரானையும் மற்றும் ஆறு தற்கொலை குண்டு தாரிகளையும் சுரேஷ் சாலேவுக்கு தான் அறிமுகம் செய்து வைத்ததாக வும் கூறியிருக்கிறார்.

ஆனால், இரண்டாயிரத்து பதி னாறு டிசெம்பர் முதல் பதினெட்டு டிசெம்பர் வரை அவர் மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் துணை தூதராக இருந்தார் என்றும் அவர் மலேசியாவில் இருந்ததை மலேசிய அதிகாரிகளுடன் உறுதிப் படுத்திக் கொள்ளலாம் என்றும் சுரேஷ் சாலே தனது தரப்பில் விளக்கம் அளித்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

ஒருவர் நாட்டிலேயே இல்லாத போது அவரைச் சந்தித்து தற் கொலை குண்டுதாரிகளை அறி முகம் செய்து வைத்ததாக ஒருவர் கூறியதை வைத்துக்கொண்டு இப்படியொரு ஆவணப்படத்தை எப்படி தயாரித்தார்கள் என்பது தெரியவில்லை.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது இந்த படம் வெளிவந்த பின்னர் தெற்கின் ஓர் அரசியல் செயல்பாட்டாளருடன் பேசினேன்.

அந்த ஆவணப்படம் தெற்கில் எந்தவகையான அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் ஆவல் எனக்கு.

'ஏற்கனவே சுரேஷ் சாலே பற்றி வண. பிதா றொகான் சில்வா தெரி வித்திருந்த இதுபோன்ற ஒரு குற்றச் சாட்டுக்கு எதிராக அவர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். அது பற்றி அவர் தெரிவித்த மறுப்பை இப்போது சனல் 4உம் உறுதிப்படுத்தியிருக்கின்றது. அதா வது, அவர் நாட்டில் இல்லாதபோது அவரைச் சந்தித்ததாக சொல்வதி லிருந்தே அவர் வேண்டுமென்று பொய் சொல்கிறார் என்பது தெரிந்துவிட்டது. இதனால் சாலே தன் பக்க நியாயத்தை இன்னும் அழுத்தமாக சொல்வதற்கு அந்த ஆவணப்படம் உதவியிருக்கின்றது. அதுவல்ல முக்கியமானது, இப் போது அவர்மீது புகார் சொல்பவர் ஒரு முஸ்லிம். இதனால் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் முஸ்லிம்கள் மீதான வெறுப்பு அதி கரிக்கப் போகின்றது. அதனை மகிந்த தரப்பும் தமக்கு சாதகமாக திருப்புவதற்கு முயற்சிக்கும். இது வீழ்ந்து கிடக்கும் ராஜபக்ஷக்களை மீண்டெழப் பண்ணும்' என்றார் அவர்.

இதனிடையே பிள்ளையானின் உதவியாளரின் வாக்குமூலத்தை வைத்துக்கொண்டு ராஜபக்ஷக் களை கைது செய்யவேண்டும் என்று நமது கஜேந்திரன் எம்.பி.யும் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

- ஊர்க்குருவி.

# அமைச்சுகளின் விளையாட்டு போட்டி கல்வி அமைச்சின் 3 அணிகள் சம்பியன்








கொழும்பு, செப். 07

வடக்கு மாகாண அமைச்சு களுக்கு இடையே நடத்தப் பட்ட விளையாட்டுப் போட்டியில் மூன்றில் கல்வி அமைச்சின் அணிகள் சம்பிய னாகின.

வடக்கு அமைச்சுகளின் அணிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்று புதன்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலர் சமன் பந்துல கலந்துகொண்டார்.

பெண்களுக்கான வலைப் பந்தாட்ட போட்டியில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அணியை எதிர்த்து வடக்கு மாகாண உள்ளூராட்சி அணி மோதியது. இதில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அணி வெற்றி பெற்று சம்பியனானது.

ஆண்களுக்கான கரப்பந் தாட்ட போட்டியில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அணியை எதிர்த்து வடக்கு மாகாண பிரதம செயலர் அணி மோதியது. இதில், வடக்கு மாகாண கல்வி அமைச்சு அணி வெற்றி பெற்று சம்பிய னானது.

பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அணியை எதிர்த்து வடக்கு மாகாண பிரதம செயலர் அணி மோதியது. இதில், வடக்கு மாகாண கல்வி அமைச்சு அணி வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அணியை எதிர்த்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அணி மோதியது. இதில் பிரதம செயலாளர் அணி வென்று சம்பியனாது. (ஐ)

# நல்லூர் திருவிழாவில் கைவரிசை காட்டிய சந்தேகநபர் கைதானார்!

யாழ்ப்பாணம், செப். 07

நல்லூர் திருவிழாவில் பெண் ஒருவரின் கைபேசியை திருடினார் என்ற குற்றச்சாட் டில் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நல்லூர் கந்தசுவாமி ஆல யத் திருவிழாவுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வருகை தந்த பெண் அடியவர் ஒருவர் ஆலயத்தின் அருகி லுள்ள உணவகம் ஒன்றில் உண வருந்தியுள்ளார். அந்தச் சம யம் அந்தப் பெண்ணின் கைபேசி திருட்டுப் போயுள்ளது.

இது தொடர்பில் அந்தப் பெண் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதன் பிரகாரம் நடவடிக் கையை மேற்கொண்ட பொலி ஸார் சி. சி. ரி. வி. கமெரா மூலம் சந்தேகநபரை இனங் கண்டு, நேற்றைய தினமும் குறித்த நபர் ஆலயத் துக்கு வருகை தந்தபோது பொலிஸ ார் அவரை கைது செய்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.(ஐ-ரி)

# யாழ். சக்கோட்டை முனையிலிருந்து தெய்வேந்திர முனைக்கு நடைபயணம்!



வடமராட்சி, செப். 04

இலங்கை மூன்றாவது தேசிய படையணியின் ஸ்ரார் சார்ஜன்ட் பீ. பீ. ரத்ன சாதனை ஒன்றை நிகழ்த்தவும் - நாட் டுக்காக அர்ப்பணித்த அனைத்து நல்லுள்ளங்களை நினைவு கூருவதற்காகவும் பருத்தித்துறை சக்கோட்டை முனையில் இருந்து தெய் வேந்திர முனை வரை நடை பயணத்தை ஆரம்பித்துள் ளார்.

நேற்று மாலை அவர் நேற்று தனது நடை பயணத் தைத் தொடங்கினார்.

மத அனுஷ்டானங்களை தொடர்ந்து 52ஆவது படை பிரிவு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யஹம்பத் ஆரம்பித்துவைத்தார்.

பீ. பீ. ரத்ன தினமும் 60 கிலோமீற்றர் தூரம் நடை பய ணத்தில் ஈடுபடவுள்ளார் என் பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.07

கோண்டாவில் றோமன் கத் தோலிக்க தமிழ் கலவன் பாட சாலையின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாட சாலை பிரதான மண்டபத்தில் அதிபர் க. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் ப. சுரேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி பா. ஜெயந்தி, அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வி. ராகினி, குமரன் விளையாட்டு கழகத் தலைவர் து. சுதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

ஈழநாடு
Eelanadu
07.09.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உள்நாட்டு பொறிமுறையில் நீதி

அரசாங்கம், உள்நாட்டு பொறிமுறை தொடர்பில் பேசிவரும் நிலையில் - தற்போது, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விவகாரம் மேலெழுந்திருக்கின்றது. இறுதி யுத்தத்தின்போதான மனித உரிமைகள் மீறல் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பில் சனல் - 4 தொலைகாட்சி வெளியிட்ட காணொலிகள் சர்வதேச கவனிப்பைப் பெற்றிருக்கின்றன. இறுதி யுத்தம் தொடர்பில் சனல் - 4 வெளியிட்ட காணொலிகள் - இலங்கையின் மீதான மனித உரிமைகள்சார் சர்வதேச அவதானத்தை தீவிரப்படுத்துவதற்கு உதவின.

இந்த நிலையில் தற்போது, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சர்வதேச கவனம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார். ஆனால், அதே சஜித் இறுதி யுத்தம் தொடர்பான விசாரணை உள்நாட்டுக்குள் இடம்பெற வேண்டுமென்று கூறுகின்றார்.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் ஆளும் தரப்புக்கு எதிராக கிடைத்திருக்கும் ஒரு வலுவான துருப்பு சீட்டு. ஈஸ்டர் தாக்குதலுக்கும் தனக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றும் இது பிரதான குற்றவாளிகளை தப்பிக்க வைக்கும் ஒரு முயற்சி என்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்திருக்கின்றார். உரிய விசாரணைகள் இடம்பெற்றால் மட்டும்தான் இந்த விடயத்தின் உண்மையைக் கண்டறிய முடியும். ஆனால், தற்கொலை தாக்குதலை மேற்கொள்ளக் கூடியவர்களை அரசியல்வாதிகளால் தயார்படுத்த முடியுமா?

நடைமுறையில் தற்கொலை தாக்குதலை சாதாரண அரசியல் குழுக்களால் முன்னெடுக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட கொள்கை நிலைப்பாட்டுக்காக மூளைச் சலவை செய்யப்பட்டவர்களாலேயே இவ்வாறான தாக்குதல்களை முன்னெடுக்க முடியும். இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகளான அல்-ஹைடா, ஐ. எஸ். ஐ. எஸ்., ஹகாணி வலையமைப்பு போன்ற இஸ்லாமிய அமைப்புகளே தற்போது தற்கொலை தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன. இந்த நிலையில் இலங்கையில் முஸ்லிம் இளைஞர்களை சாதாரண அரசியல்வாதிகளால் மூளைச் சலவை செய்ய முடியுமா? அவ்வாறாயின் குறிப்பிட்ட கருத்தில் பின்புலத்தில் மூளைச் சலவை செய்யப்பட்டு அதனடிப்படையில் பயிற்சிகளை பெற்றிருந்த நபர்களை - பிறிதோர் இலக்குக்காக சிலர் பயன்படுத்தியிருக்கின்றனரா? இந்தக் கேள்விக்கு சனல் - 4 ஆவணப்படத்தில் பதில் இல்லை.

இதற்கு பதில் தேட வேண்டுமாயின் உள்நாட்டு பொறிமுறையின் கீழ் இதற்கான பதிலை ஒருபோதுமே தேட முடியாது. அவ்வாறாயின் எதிரணியினர் கூறுவது போன்று இது தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். இதேவேளை, இந்தத் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து அமெரிக்க உள்ளக - உளவுத் துறை உட்பட பல்வேறு முக்கிய புலனாய்வு அமைப்புகள் நேரடியாக விடயங்களை ஆராய்ந்திருந்தன. அவர்களின் தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை.

ஆனால், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விடயம் - இலங்கையின் உள்நாட்டு பொறிமுறை மீதான அவநம்பிக்கையை - சாத்தியமின்மையை மீண்டும் உலகின் முன் கொண்டுவந்திருக்கின்றது - ஏனெனில், தாக்குதல் தொடர்பான விசாரணைகள் திட்டமிட்டு குழப்பப்பட்டிருக்கின்றன - திசை திருப்பப்பட்டிருக்கின்றன - என்னும் குற்றச்சாட்டுகளை குறித்த ஆவணப்படம் வெளியிட்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் உள்நாட்டு பொறிமுறையின் கீழ் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு நீதியும் கிடைக்காது என்பது மீண்டுமொரு முறை அரங்குக்கு வந்திருக்கின்றது. இந்த விவகாரம், ஏற்கனவே தமிழ் மக்களின் விடயத்தில் தெளிவாகவே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அது சாத்தியமே இல்லை என்பது தற்போது மீண்டுமொரு முறை சர்வதேசத்தின் பார்வைக்கு வந்திருக்கின்றது.

# வவுனியா மாணவர்களுக்கு சீருடை, காலணி அன்பளிப்பு



*வவுனியா, செப். 07*

*பூவரசன்குளம் - மணியர்குளம் வித்தியானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 25 மாணவர்களுக்கு சீருடை, காலணி அமெரிக்கா, கனடா மற்றும் நோர்வே வாழ் உறவுகள் அன்பளிப்பாக வழங்கினர்.*

*அமெரிக்காவை சேர்ந்தவர்களான ஜெயந்தி பொன்னையா, லவன் பொன்னையா, கனடாவை சேர்ந்த திருமதி ஞானமலர் சண்முகராஜா மற்றும் நோர்வேயை சேர்ந்த திருமதி லலிதாதேவி சிவகுமார் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் சீருடை, காலணியும் வழங்கி வைக்கப்பட்டன.*

*இந்த நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.*

*வித்தியானந்தா பாடசாலையின் அதிபர் திருமதி வாசுகி பரமவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செட்டிக்குளம் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பின சுப்பையா ஜெகதீஸ்வரன், வவுனியா சிவபுரம் ஆரம்ப பாடசாலையின் அதிபர் பொன்னுசாமி யோகநாதன், சமூகச் செயல்பாட்டாளர்களான மகாதேவா சுஜேந்திரன், பஞ்சலிங்கம் சிறீதரன் மற்றும் இராஜதுரை தயாபரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)*

# செல்வம் எம். பிக்கு நீதிமன்றம் பிணை

*யாழ்ப்பாணம், செப். 06*

*சுதந்திர தினத்தை அரசுக்கு எதிரான கரிநாளாக பிரகடனப்படுத்தி பேரணியில் பங்களித்தனர் என பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் நீதிமன்றில் முற்படாத நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள செல்வம் அடைக்கலநாதன் எம். பி. நேற்று புதன் கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.*

*நாட்டின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமான பேரணியில் பங்களித்தமை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்களின் அடிப் படையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட சில அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டது.*

*நீதிமன்றில் முற்படாதமைக்காக செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டவர்களுக்கு கடந்த திங்கட் கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.*

*இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறிகாந்தா ஊடாக மன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.*

*இதனை ஏற்றுக்கொண்ட மன்று ஆட்பிணையில் செல்வதற்கு செல்வம் அடைக்கலநாதன் எம். பிக்கு அனுமதியளித்திருந்தது.*

*இந்த வழக்கில் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் யாழ். மாவட்ட பொறுப்பாளருமான தியாகராஜா நிரோஷ் பிணை ஒப்பமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(ஐ)*

# இந்திய, இலங்கை கலைஞர்களின் ‘குழல் இசை நாத வந்தனம்’ நிகழ்வு


*யாழ்ப்பாணம், செப். 07*

*இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்திய, இலங்கை இசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் ‘குழல் இசை நாத வந்தனம்’ நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.*

*யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இந்தியாவின் புகழ் பெற்ற புல்லாங்குழல் இசைக் கலைஞர் ஜே. ஏ. ஜெயந்த் மற்றும் வயலின் இசைக் கலைஞர் அனந்தகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்பர்.*

*(ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். கூடுதல் வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**மிதுனம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கடகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். திட்டங்கள் நிறைவேறும்.

**சிம்மம்**
மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் செய்து முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**கன்னி**
உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் விலகும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். பாராட்டப்படுவீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**விருட்சிகம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக்கொள்வீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், வழக்கு சாதகமாகும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மனதில் நிறைவு பெறும் நாள்.

**கும்பம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்ப்புகள் விலகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். சூட்சுமங்களை உணர்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

# என் நாடு தமிழ்நாடுதான்!

## நாம் தமிழர் சீமான்

சென்னை, செப். 07

பாரத் என்று வையுங்கள், இல்லை சூரத் என்று வையுங்கள். அது அவர்கள் நாட்டுக்கு பெயர் வைக்கின்றனர். அதில் நான் தலையிட முடியாது. என் நாடு தமிழ்நாடு. அதனால், அவர்கள் நாட்டுக்கு என்ன வேண்டுமானாலும் பெயர் வைத்துக் கொள்ளட்டும் - என்று தெரிவித்துள்ளார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்து அவர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

“இந்த பாஜக ஆட்சியில், முன்னறிவிப்பு செய்து எந்த செயலையும் செய்தது கிடையாது. எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை. பாரத் என்று வையுங்கள், இல்லை சூரத் என்று வையுங்கள். அது அவர்கள் நாட்டுக்கு பெயர் வைக்கின்றனர். அதில் நான் தலையிட முடியாது. என் நாடு தமிழ்நாடு. அதனால், அவர்கள் நாட்டுக்கு என்ன வேண்டுமானாலும் பெயர் வைத்துக் கொள்ளட்டும். வெள்ளைக்காரர்கள் வைத்த பெயர் என்பதால் பெயர் மாற்றுகின்றனர். இந்த நாடே அவன் உருவாக்கி வைத்த நாடுதானே. வில்லியம் ஜேம்ஸ் கையெழுத்திட்டதால்தானே இந்து என அறியப்பட்டீர்கள். அந்த பெயரையும் மாற்றிவிடுங்கள். பாரத் என்ற பெயர் வைத்துவிட்டு, இந்துவுக்குப் பதில் வேறு பெயர் வைக்கட்டும்.

நாட்டுக்கு பெயர் மாற்றுவதால் என்ன ஆகப்போகிறது. 150 லட்சம் கோடி ரூபாய் கடன் இருக்கிறது. பெயரை மாற்றியதால் தள்ளுபடி செய்துவிடுவார்களா? அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலைவாய்ப்பு, பசியில்லாத பாரதம் அப்படியெல்லாம் உருவாகி விடுமா? ஆட்சிக்கு வந்தபோதே பாரத் என்று ஏன் பெயர் மாற்றவில்லை? என்றும் கேள்வி எழுப்பினார். (ஐ)

# தமிழ்நாடு பா. ஜ. க. தலைமையை 2 வருடங்களுக்கு என்னிடம் தாருங்கள்

## சுப்பிரமணியன் சுவாமி கோரிக்கை

சென்னை, செப். 07

தமிழ்நாடு பா. ஜ. கவை இரு ஆண்டுகளுக்கு தாருங்கள், பிறகு பாருங்கள், இந்து விரோதிகளை திஹார் சிறையில் பார்க்கலாம் என பா. ஜ. க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதனம் என்பதை எதிர்ப்பதை விட, ஒழிப்பதை நாம் செய்ய வேண்டியதே முதல் பணி என தெரிவித்திருந்தார். இதற்கு பா. ஜ. க. மற்றும் இந்து அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

தமிழ்நாடு பா. ஜ. க. கோழைத்தனமாக உள்ளது. தமிழ்நாடு பா. ஜ. கவை இரண்டு ஆண்டுகளுக்கு என்னிடம் தாருங்கள். பிறகு பாருங்கள். தமிழ்நாட்டில் உள்ள இந்து விரோதிகளை திஹார் சிறையில் சந்திக்கலாம் என்று அவர் தனது டுவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# காவிரி நதி நீர் வழக்கு; 21ஆம் திகதிக்கு மாற்றம்!

புதுடில்லி, செப். 07

காவிரி விவகாரம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தண்ணீர் திறந்து விடக் கோரி தமிழக அரசு தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வரவிருந்த நிலையில் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் சமீபத்தில் நடந்த காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்தில், தமிழகத்துக்கு வினாடிக்கு 5,000 கன அடி வீதம், 15 நாட்களுக்கு காவிரியில் தண்ணீர் திறக்கும்படி கர்நாடகாவுக்கு உத்தரவிடப்பட்டது. இதன்படி, கர்நாடக அணைகளில் இருந்து, தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதைக் கண்டித்து, காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் தினமும் விவசாயிகள், அரசியல் கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தமிழகத்திற்கு குறைந்தது வினாடிக்கு, 24 ஆயிரம் கன அடி வீதம் ஒகஸ்டில் காவிரியில் தண்ணீர் அளிக்க வேண்டும். இது தொடர்பாக, காவிரி மேலாண்மை ஆணையம் நடவடிக்கை எடுக்க ஆணையிடுமாறு கடந்த மாதம் 14ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை அவசரம் மற்றும் அவசியம் கருதி, உடனடியாக விசாரிக்கும்படி தமிழக அரசு கோரியது. அதை ஏற்று இந்த மனுவை விசாரிக்க, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், காவிரி விவகாரம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. தண்ணீர் திறந்து விடக் கோரி தமிழக அரசு தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வரவிருந்த நிலையில் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பாரத் எனப் பெயரை மாற்றுவதன்மூலம் இந்தியர்கள் மனதை புண்படுத்தக்கூடாது

## தி. மு.க வின் கனிமொழி

சென்னை, செப். 07

“எல்லா திட்டங்களுக்கும் புரியாத பெயர்களை வைக்கும் ஒன்றிய அரசுக்கு, பாரத் என பெயர் மாற்றுவது சாதாரண ஒன்றாக தோன்றலாம். இப்படி பெயர் மாற்றுவதன் மூலம் இந்தியர்களின் மனதை புண்படுத்தக்கூடாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்” என்று தி. மு. க. எம். பி., கனிமொழி கூறியுள்ளார்.

சென்னையில் தி. மு. க. எம். பி., கனிமொழி நேற்று செய்தியாளர்களை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றும் திட்டம் குறித்து கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர்,

“அரசமைப்புச் சட்டத்தில் அவ்வாறு இருப்பதாகக் கூறுவார்கள். இந்த இரண்டு வார்த்தைகளுமே அதில் உள்ளன. மேடைகளில் பேசுகிறவர்கள் கூட இந்த இரண்டு பெயர்களையும் பயன்படுத்துகிற சூழல்தான் இருந்து வருகிறது.

ஆனால், எப்போதுமே பாரதப் பிரதமர் என்பதைவிட, Prime Minister of India என்றுதான் அழைப்பிதழ்கள் கொடுக்கப்படும். அதேபோல, President of India தான். திடீரென்று, தேவையில்லாமல் புதிதாக ஒரு சர்ச்சையை ஏற்படுத்துகிற வகையில், பாரத குடியரசுத் தலைவர் என்பதும், இந்தியாவின் பெயரை பாரதம் என்று மாற்றப்போகிறோம் என்று கூறுவதற்குப் பின்னால் ஓர் அரசியல் இருக்கிறது. அதை நாம் எதிர்க்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுகிறோம்.

‘இந்தியா’ என்ற பெயரில், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு தளத்தில் ஒரு கூட்டணியை உருவாக்கியிருக்கும்போது, அந்தப் பெயரே ஒன்றிய அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய சூழலில்தான் பெயரையே மாற்றியுள்ளனர். வரலாற்றை மாற்றுவது, பெயர்களை மாற்றுவது எனத்தொடங்கி, சட்டங்களுக்குக்கூட ஹிந்தியில் பெயர் வைக்க ஆரம்பித்துவிட்டனர். எல்லா திட்டங்களுக்கும் புரியாத பெயர்களை வைக்கும் அவர்களுக்கு இதுபோல மாற்றுவது சாதாரண ஒன்றாக தோன்றலாம். எத்தனையோ விசயங்களில் மனதை புண்படுத்திவிட்டதாக கூறும் அவர்கள், இப்படி பெயர் மாற்றுவதன் மூலம் இந்தியர்களின் மனதை புண்படுத்தக்கூடாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்” என்றார். (ஐ)

# மின் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை

## மின்சார பாவனையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 07

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய இந்த வருடம் நான்காவது முறையாக மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக மின்சார பாவனையாளர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.**

குறித்த முன்மொழிவுக்கு அனுமதி வழங்கவேண்டாம் என பொதுப் பயன்பாடு ஆணைக்குழுவிடம் மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்திருந்த போதும், இந்த ஆண்டு மூன்றாவது முறையாக கட்டணத்தை அதிகரிப்பதற்கு முயற்சித்தது.

குறித்த முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தற்போது நான்காவது முறையாக மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வகையில் மின் கட்டணம் 56 வீதம் அதிகரிக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

இந்த கட்டண அதிகரிப்பானது சட்டத்திற்கு முரணானது எனவும், இவ்வாறு கட்டணம் அதிகரிக்கப்படும் நிலையில் இந்த ஆண்டு மின்கட்டணம் 200 வீத அதிகரிப்பாகுமென மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க சுட்டிக்காட்டினார். (அ)

# பிரிட்டனில் 2 குழந்தைகளை காப்பாற்றுவதற்காக தனது உயிரை தியாகம் செய்த இலங்கைத் தமிழர்!



லண்டன், செப். 07

பிரித்தானியாவில் அருவியில் குளித்த போது நீரில் சிக்கி உயிருக்கு போராடிய இரண்டு சிறார்களை மீட்கும் முயற்சியில் இலங்கைத் தமிழ் இளைஞர் உயிரிழந்துள்ளார்.

வேல்ஸில் அமைந்துள்ள அருவியில் தான் இந்த துயர சம்பவம் நடந்துள்ளது.

27 வயதான மோகனநீதன் முருகானந்தராஜா விமானியாக உள்ளார்.

இவர், குறித்த அருவியில் இரண்டு சிறார்கள் உயிருக்கு போராடுவதை கண்டு அவர்களை மீட்கும் முயற்சியில் இறங்கினார்.

பின்னர் சிறார்கள் தண்ணீரில் இருந்து வெளியே இழுக்கப்பட்டு காப்பாற்றப்பட்டபோதிலும் மோகனநீதன் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

பொலிஸார், தீயணைப்புப் படையினர் உள்ளிட்ட அவசர சேவை துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோதிலும் மோகனநீதனின் உடலை உடனடியாக கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர் அவரது சடலம் நீருக்கடியில் கமெரா மூலம் இனங்காணப்பட்டு மிகுந்த போராட்டத்திற்கு பிறகு மீட்கப்பட்டது. (அ)

# அபுதாபி-கட்டுநாயக்க இடையே விரைவில் நேரடி விமான சேவை

கொழும்பு, செப். 07

அபுதாபி மற்றும் கட்டுநாயக்கவுக்கு இடையிலான நேரடி விமான சேவை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அபுதாபியின் எயார் அரேபியா விமான சேவை அறிவித்துள்ளது.

இதன்படி குறித்த நிறுவனமானது அபுதாபி மற்றும் கட்டுநாயக்கவுக்கு இடையில் வாராந்தம் மூன்று விமான சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்கவுக்கும், திங்கள், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் கட்டுநாயக்கவிலிருந்து அபுதாபிக்கும் விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 27,158 மாணவர்கள் 3 பாடங்களிலும் எவ்

கொழும்பு, செப். 07

திங்கட்கிழமை வெளியிடப்பட்ட உயர்தரப் பரீட்சை 2022 (2023) முடிவுகளின்படி, மொத்தப் பரீட்சார்த்திகளில், 9,904 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் ஏ பெறுபேறு பெற்றுள்ளனர். அதே நேரத்தில் 27,158 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் (எவ்) தோல்வியடைந்துள்ளனர்.

இந்த ஆண்டு 2022 (2023) உயர்தரப் பரீட்சைக்கு 263,933 மாணவர்கள் தோற்றியுள்ளனர். அவர்களில் 9,904 மாணவர்கள் 3 ஏ பெறுபேறு பெற்றுள்ளனர். 3 ஏ பெறுபேறு பெற்றவர்களின் சதவீதம் 3.75 ஆகவும், மூன்று பாடங்களிலும் தோல்வியடைந்த (எவ்) மாணவர்களின் சதவீதம் 10.29 ஆகவும் உள்ளது.

பரீட்சைகள் திணைக்கள புள்ளிவிபரங்களின்படி, உயிரியல் விஞ்ஞான பாடத்தில் 40,329 மாணவர்கள் பரீட்சையை எதிர்கொண்டதுடன் அவர்களில் 23,178 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

பௌதீக விஞ்ஞான பாடத்தில் 35,197 மாணவர்கள் பரீட்சையை எதிர்கொண்டதோடு அவர்களில் 20,138 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் மொத்தம் 59,114 மாணவர்கள் பரீட்சையை எதிர்கொண்டதுடன் அவர்களில் 40,140 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர். இதேவேளை கலைப் பிரிவில் 99,363 மாணவர்கள் பரீட்சைக்கு முகம் கொடுத்துள்ளதுடன் அவர்களில் 64,333 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மேலும், பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் 16,051 மாணவர்கள் பரீட்சையை எதிர்கொண்டதுடன் அவர்களில் 10,633 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் பிரிவில் மொத்தம் 8,082 மாணவர்கள் தேர்வை எதிர்கொண்டதுடன் அவர்களில் 5,981 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

3 ஏ பெறுபேறு பெற்ற 9,904 மாணவர்களில், 4,198 மாணவர்கள் வணிகப் பிரிவில் இருந்தும், 3,622 மாணவர்கள் கலைப் பிரிவில் இருந்தும் பதிவாகியுள்ளனர். உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் பிரிவில் இருந்து குறைந்த எண்ணிக்கையிலான 3 ஏ பெறுபேறு பதிவாகியுள்ளன. அதில் 73 மாணவர்களே 3 ஏ பெறுபேறு பெற்றனர். (அ)

# தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்படும்

கொழும்பு, செப். 07

தனியார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிகள் மீதான சகல கட்டுப்பாடுகளையும் 2023ஆம் ஆண்டு இறுதியில் நீக்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாக நிதி அமைச்சின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக கோதுமை மா மற்றும் தரை ஓடுகளை நிரவகிப்பதில் இத்தகைய கட்டுப்பாடுகள் ஏற்படுத்திய இரட்டைக் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு, அத்தகைய கட்டுப்பாடுகள் எவ்வளவு காலம் இருக்கும் என்று என குழு வினவிய போதே அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் கூடியபோதே இந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2341 / 38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் குழுவில் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைக்கும் ஹர்ஷடி சில்வா தலைமையிலான அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்கள் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டு அத்தகைய நபர்களின் வரிச்சுமையைக் குறைப்பது, வெட்டப்பட்டு மெருகூட்டப்பட்ட பின்னர் மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற கரடுமுரடான சீர்செய்யப்படாத மாணிக்கக் கற்கள், வரிச்சுமையைக் குறைப்பதன் மூலம் உலக சந்தையில் அத்தகைய இலங்கை வணிகத்தின் போட்டித் தன்மையைப் பேணுவது, தீர்வையற்ற விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் ஏதேனும் பொருட்கள் குறித்தும் இந்தத் திருத்தத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, வஜிர அபேவர்தன, கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக, நிமல் லான்சா, இசுறு தொடங்கொட, மேஜர் பிரதீப் உதுகொட, நாலக்க கொடஹேவா, மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பதுளையில் கோவில்களை உடைத்து கொள்ளையடித்து வந்த மூவர் கைது!

கொழும்பு, செப். 07

பதுளையில் பல பகுதிகளிலும் ஆலயங்கள் மற்றும் விகாரைகளை உடைத்து, உண்டியல் பணம், நகைகள், பெறுமதிமிக்க பித்தளை பொருட்களை கொள்ளையடித்து வந்தனர் என சந்தேகிக்கப்படும் மூவர் பசறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.எம். பியரட்ண தலைமையிலான குழுவினர் நேற்று முன் தினம் அதிகாலை வீதி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கையில், சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த ஸ்கூட்டர் ரக உந்துருளி ஒன்றையும் மேலும் ஒரு உந்துருளியையும் நிறுத்தி சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது ஸ்கூட்டர் ரக உந்துருளியில் வைக்கப்பட்டிருந்த பை ஒன்றில், ஆலயங்களில் உள்ள பித்தளைப் பொருட்கள் இருந்துள்ளன.

இதனையடுத்து குறித்த உந்துருளியை சோதனைக்கு உட்படுத்திய போது பணம், பித்தளைப் பொருட்கள், தங்க நகைகள் அடகு வைத்ததற்கான பற்றுச் சீட்டுகள், கத்தி உட்பட மேலும் சில ஆயுத பொருட்களும், 3 கையடக்க தொலைபேசிகள் மற்றும் 2 உந்துருளிகளும் சந்தேக நபர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பசறை பொலிஸார், இவர்களை பசறை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணைகளை மேற்கொண்டபோது, ஹொப்டன் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றையும் பசறை பெல்காத்தன்ன பகுதியில் உள்ள விகாரை ஒன்றையும் உடைத்து குறித்த பொருட்களைக் கொள்ளையடித்ததாக கூறியுள்ளனர்.

இதற்கிடையில் பெல்காத்தன்ன விகாரையின் தேரரினால் பெல்காத்தன்ன பகுதியில் அமைந்துள்ள விகாரை நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸ் நிலையத்தில் புகாரளிக்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

உந்துருளியில் பயணித்த 25 வயதுடைய ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும், 29 வயதுடைய ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவரும், 20 வயதுடைய கனுபெலல பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த இருவரும் கணவன், மனைவி என பசறை பொலிஸார் தெரிவித்ததுடன் கனுபெலல பகுதியைச் சேர்ந்தவர் இவர்களது நண்பர் என தெரியவந்துள்ளது.

இவர்கள் பதுளை பகுதிகளில் பல திருட்டு சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)

# நட்டத்துடன் நகர்கிறது இலங்கை மின்சாரசபை

கொழும்பு, செப். 07

**வறட்சியினால் மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ள நிலையில், செலவின சீர்திருத்தக் கட்டணங்களை உடனடியாக மீளாய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையினால் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.**

கட்டணக் குறைப்பினால் தற்போதும் இலங்கை மின்சார சபை 33 பில்லியன் ரூபா நட்டத்துடன், பெரும் நட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக சபையின் பொது முகாமையாளர் ஆணைக்குழுவிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

வறட்சியினால் நீர்மின் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் கடந்த 7ஆம் திகதி வெளியிட்ட முன்னறிவிப்பிற்கமைய, இந்த நிலைமை ஒக்டோபர் மாதம் வரை நீடிக்கலாம் என மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனவரி முதல் ஜூலை இறுதி வரை நாளொன்றுக்கு 44.16 ஜிகாவாட் மணிநேரமாக இருந்த மின்சாரத் தேவை ஆகஸ்ட் மாதத்தில் 48.61 ஆக அதிகரித்துள்ளதாகவும் மின்சார சபை கூறியுள்ளது.

இதன் பின்னணியில், அனல் மின் உற்பத்திக்கு அதிக செலவு செய்ய வேண்டியுள்ளதாக அதன் பொது முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கக் கொள்கைக்கு அமைய மின்சாரக் கட்டணங்கள் உற்பத்தி செலவிற்குப் பொருந்த வேண்டும் என்பதால், கொள்கை வழிகாட்டுதலின் கீழ் அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கடிதத்தின் ஊடாக கட்டணத்தை அதிகரிக்குமாறு கூறவில்லையெனவும் தமது அசௌகரியத்தை தெரிவித்துள்ளதாகவும் மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கட்டண உயர்வு குறித்து ஆணைக்குழுவே தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அடுத்த வருடம் ஜனவரி மாதம் வரை மின் கட்டண திருத்தம் இடம்பெறாது என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர கடந்த 6 ஆம் திகதி அறிவித்தார்.

ஆனால், அமைச்சரின் குறித்த அறிக்கையின் பின்னர் மழையின் அளவு முற்றிலும் மாறிவிட்டதாக மின்சார சபை தற்போது கூறுகிறது.

ஆகஸ்ட் மாதம் எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை என்றும், செப்டம்பர், ஒக்ரோபர் மாதங்களில் மழை பெய்யாவிட்டால், அனல் மின்சாரத்தையே நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ)

# பிரிட்டன் லெஸ்ரர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானார் நிஷான் கனகராஜா



லண்டன், செப். 07

பிரித்தானியா லெஸ்ரர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக யாழ். சென் . ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான பேராசிரியர் நிஷான் கனகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் நிஷான் கனகராஜா கடந்த 1985 ஆம் ஆண்டு கணிதத்துறையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று கேம்பிறிஜ் பல்கலைக்கழத்திற்குத் தெரிவாகி கல்வி கற்றுள்ளார்.

இதேவேளை, கடந்த 1966ஆம் ஆண்டில் யாழ். சுண்டிக்குளியில் பிறந்த பேராசிரியர் நிஷான் கனகராஜாவின் தந்தை கனகராஜா யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியராகவும் தாய் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் ஆசிரியையாகவும் பணியாற்றியவர்கள்.

கடந்த 2018ஆம் ஆண்டு உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் ஆண்டுத் தரவுகளின் படி, லெஸ்ரர் பல்கலைக்கழகம் 167ஆம் இடத்திலும் பிரித்தானியாவில் 25ஆம் இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 63,156 விவசாயிகள் பாதிப்பு

கொழும்பு, செப். 07

சில மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 63156 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெற்செய்கையில் ஈடுபடும் 62754 பேரும் ஏனைய பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 402 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குருனாகலை மற்றும் உடவலவ ஆகிய பகுதிகளிலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சட்ட ரீதியான பொதுச் செயலர் நானே!

## மகிந்த அமரவீர கூறுகிறார்

கொழும்பு, செப். 07

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சட்டரீதியான பொதுச் செயலாளர் தான் என வும் அது தொடர்பாக தொடரப்பட்டுள்ள வழக்கிற்கு அமைய சட்ட ரீதியான பொதுச் செயலாளர் யார் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும் எனவும் கமத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கமத்தொழில் அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நானே தற்போதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சட்ட ரீதியான பொதுச் செயலாளர். சிலர் பொதுச் செயலாளர் என்ற பதாகையை மாட்டிக் கொண்டு செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தினாலும் அவர்களுக்கு சட்ட ரீதியான உரிமை யில்லை.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் எனக் கூறிக் கொள்ளும் நபரை பொதுச் செயலாளராக தேர்தல் ஆணையாளர் ஏற்கமாட்டார்.

இதனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் எனக் கூறிக்கொள்ள அவருக்கு தார்மீக உரிமையில்லை.

இந்த விடயம் சம்பந்தமாக நான் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடர்ந்துள்ளேன். வழக்கின் தீர்ப்பு விரைவில் கிடைக்கும். அந்த தீர்ப்பின் அடிப்படையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் யார் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

அனைத்து அரசாங்கங்களிலும் மகிந்த அமரவீர அமைச்சராக பதவி வகிக்கின்றார் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

மகிந்த அமரவீர இருக்கும் பக்கத்தில் அரசாங்கம் இருக்கின்றது-என்றார். (அ)

# காலநிலை மாநாட்டில் எகிப்து பிரதமரை சந்தித்து பேசினார் ருவான் விஜேவர்தன!

கொழும்பு, செப். 07

கென்யாவில் நடைபெறும் ஆபிரிக்க காலநிலை மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருக்கும் ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன, எகிப்து பிரதமர் முஸ்தபா மெட்பௌலியை சந்தித்து கலந்துரையாடினார்.



குறித்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய ருவான் விஜேவர்தன கலந்துகொண்டார்.

இந்த கலந்துரையாடலில், காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பிலும், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்திறன் நடவடிக்கைகள் தொடர்பிலும் ருவான் விஜேவர்தன எகிப்திய பிரதமரை தெளிவுப்படுத்தினார்.

தமது பங்காளித்துவத்தை விரிவுபடுத்தும் முயற்சியில், இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

எல்லைகளைத் தாண்டிய சுற்றுச்சூழல் சவால்களுக்கு புதுமையான தீர்வுகளைக் கண்டறிவதில் இரு தலைவர்களும் தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர்.

மேலும், இந்த சந்திப்பின் இராஜதந்திர முக்கியத்துவத்தை அதிகரிக்கும் வகையில், கென்யாவிற்கான இலங்கை தூதுவர் கணநாதன் கலந்துகொண்டார். (அ)

# யால தேசிய பூங்காவை அண்டிய பகுதியில் காடழிப்பு நடவடிக்கை

## வனவிலங்குகளின் உயிருக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, செப். 07

யால தேசிய பூங்காவை அண்மித்த பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி பாரியளவில் அழிக்கப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துவதற்காக உலக வாங்கி வழங்கிய கடன் உதவியை முறைகேடான முறையில் பயன்படுத்தி இப்பணிகள் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

குறித்த வனப்பகுதியில் சிறுத்தைகள், யானைகள், மான்கள், பன்றிகள் மற்றும் பல்வேறு வகையான பறவைகள் காணப்படுவதாகவும், அவை பாதுகாக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் இடம்பெறும் காடழிப்பு காரணமாக பல வன விலங்குகளின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டுகிறது.

நாடளாவிய ரீதியில் அண்மைக் காலமாக பாரியளவில் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் நிலவிய வறட்சியான காலப்பகுதியில் காடுகளுக்கு தீ வைக்கும் நடவடிக்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன், இறைச்சிக்காக விலங்குகளை கொல்லும் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

இந்த நிலையிலே, விலங்குகளை வேட்டையாடுபவர்கள் மற்றும் காடுகளுக்கு தீ வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

காட்டுத்தீயை தடுப்பதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அடங்கிய அமைச்சரவை பத்திரத்தை முன்வைக்குமாறும் முன்மொழியப்பட்டுள்ளது. (அ)

# வடக்கு மக்களின் முன்னேற்றத்திற்கு ஐ.நா. தொடர்ந்தும் உதவி வழங்கும்!

## வதிவிடப் பிரதிநிதி ஆளுநரிடம் உறுதி

யாழ்ப்பாணம், செப். 07

**வடமாகாண மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் பூரண ஆதரவை வழங்கும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்றூ பிராஞ்ச் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மக்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் அன்றாட செயற்பாடுகள் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், மக்களின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்புகளை ஒழுங்கமைக்க ஐக்கிய நாடுகள் சபை பூரண ஆதரவை வழங்கும் எனவும் மார்க் அன்றூ தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் மாலை ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



வடமாகாணத்தின் சமூக, பொருளாதார மற்றும் நல்வாழ்வு தொடர்பில் திருப்திகரமான போக்கு காணப்படுவதாகவும், எதிர்காலத்தில் இந்த செயற்பாடுகளின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதே ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கமாகும் எனவும் அவர் கூறினார்.

வடமாகாண ஆளுநர் வடமாகாணத்தின் தற்போதைய நிகழ்வுகள் குறித்து அவருக்கு விளக்கமளித்தார்.

இக்கலந்துரையாடலில் வடமாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர்.

(அ)

# 14 மில்லியன் ரூபா பெறுமதியான கஞ்சா, போதைமாத்திரைகள் மீட்பு

கொழும்பு, செப். 07

கொழும்பு மத்திய அஞ்சல் பரிமாற்றகத்தில், 14 மில்லியன் ரூபா பெறுமதியான கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் அடங்கிய பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா, கனடா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து, இலங்கையின் போலி முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட பொதிகளிலிருந்தே இந்த போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த பொதிகளை பொறுப்பேற்க எவரும் முன்வராதமையினால், சந்தேகமடைந்த சுங்க அதிகாரிகள் அவற்றை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, அவற்றிலிருந்து 1.4 கிலோ நிறையுடைய கஞ்சா மற்றும் போதைமாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

(அ)

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, செப். 07

மழையுடனான வானிலையுடன் நீர் மின் உற்பத்தி நிலையத்தை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் சற்று உயர்வடைந்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையத்தை அண்மித்துள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 26.8 வீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவித்த மின்சார சபை, நாளாந்த மின் உற்பத்தியில் நீர் மின் உற்பத்தி 26 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

மவுசாகலை மற்றும் கொத்மலை நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 41 வீதமாக அதிகரித்துள்ளது.

0.9 வீதமாக காணப்பட்ட சமனல வாவியின் கொள்ளளவு 4.6 வீதமாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக சமனல வாவியின் நீர் வெளியேறும் பகுதிகளை மூடும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், கூடியளவில் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

# மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்க முடிவு

கொழும்பு, செப். 07

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட 11,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகளை உடனடியாக விசாரிப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக மட்டத்தில் முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்படும் என ஆணையாளர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள முறைப்பாடுகளில் சிலவற்றை வேறு நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் பொதுச் சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, தொழில் திணைக்களம், நுகர்வோர் விவகார அதிகார சபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அந்த முறைப்பாடுகள் உரிய நிறுவனங்களால் சரியான முறையில் விசாரணை செய்யப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதாகவும் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

கிடைத்துள்ள அனைத்து முறைப்பாடுகளையும் உடனடியாக விசாரணை செய்வதன் மூலம், மக்களுக்கான நீதியை நிலைநாட்ட முடியும் என சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார். (அ)

‘எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து’;

# பொருளாதாரப் பாதிப்பில் கருவாடு உற்பத்தியாளர்கள்

கொழும்பு, செப். 07

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் கருவாட்டு உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்கொண்டுள்ள பாதிப்பு தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கான நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

நீர்கொழும்பு பகுதியில் கருவாடு உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்களை நேற்று முன் தினம் கடற்றொழில் அமைச்சில் சந்தித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இதன்போது கருவாட்டு உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்தனர்.

அதன்படி, “ தாங்கள் நீர்கொழும்பு களப்பு மற்றும் கடற்கரையை அண்டிய பகுதிகளில் கருவாடு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றோம்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து காரணமாக தங்களது தொழிலுக்கும் பாதிப்பு மற்றும் இழப்பு ஏற்பட்டது.

கப்பல் விபத்து காரணமாக கடற்கரையில் கருவாடு உலர வைக்கும் நடவடிக்கைகள் சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் அதன் காரணமாக எமது பொருளாதரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது.

இவை தொடர்பாக அவதானம் செலுத்தி எங்களுக்கும் நட்டஈடு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும” என கருவாட்டு உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கடற்றொழில் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

கருவாடு உற்பத்தியாளர்கள் தரப்பில் முன் வைக்கப்பட்ட கருத்துக்களை கேட்டறிந்த கடற்றொழில் அமைச்சர்,

“எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடுகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன.

கடற்றொழில் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கும் நட்டஈட்டினை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கருவாட்டு உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அவர்கள் எதிர்கொண்ட பாதிப்பு தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கான நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என தெரிவித்தார். (அ)

# மோசடியாளர்கள் தொடர்பில் அவதானமாக செயற்படுங்கள்

## ஐக்கிய நாடுகள் சபை அறிவுறுத்தல்

கொழும்பு, செப். 07

ஐக்கிய நாடுகள் சபையின் பெயர் மற்றும் இலச்சினையை பயன்படுத்தி பணம் மற்றும் தனிப்பட்ட தகவல்களை கோரி மோசடியில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

சமூக வலைத்தளங்கள், குறுஞ்செய்திகள், இணையத்தளங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் இவ்வாறு முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இந்த நிலையில், பணம் மற்றும் தனிப்பட்ட தகவல்களை வழங்குவதனை தவிர்க்குமாறு வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை ஆட்சேர்ப்பு செயன்முறையின் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டணம் அரவிடுவதில்லை எனவும் அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறான முறைகேடான சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதும் இல்லை எனவும் ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

(அ)

# எம்பிலிபிட்டிய வைத்தியசாலை அறுவைச் சிகிச்சைகள் முடக்கம்!

கொழும்பு, செப். 07

எம்பிலிபிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்த ஒரேயொரு மயக்க மருந்து நிபுணரும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அறிவிக்காமல் அவர் வைத்தியசாலையை விட்டு சென்றுள்ளதாக எம்பிலிபிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் நிர்வாகக் குழுவின் பிரதம அமைப்பாளர் ஆர்.எஸ். குணசேன தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த மயக்க மருந்து நிபுணர் மீண்டும் பணிக்கு வரமாட்டார் என அவரின் தந்தை எனக் கூறிக் கொள்ளும் நபர் ஒருவர் வாட்ஸ் அப் செய்தி மூலம் வைத்தியசாலை அதிகாரிகளுக்கு அறியப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் உள்ள ஒரேயொரு மயக்க மருந்து நிபுணர் வெளியேறியதால் இரண்டு அறுவைச் சிகிச்சை பிரிவுகள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவின் பணிகள் என்பன முற்றிலும் முடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இதன்படி சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய நோயாளர்கள் கராப்பிட்டிய மற்றும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படவுள்ளனர்.

(அ)

# தன்னிச்சையான ஒப்பந்த கனிய மணல் அகழ்வை உடனடியாக நிறுத்தவேண்டும்

## குச்சவெளியில் மக்கள் ஆர்ப்பாட்டம்






திருமலை, செப். 07

திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்னால் பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன் தினம் இடம்பெற்றது.

திருகோணமலை - புல்மோட்டை தொடர்க்கம் நிலாவெளி வரையான கடற்கரைப் பகுதிகளில் புவி சத்திரவியல் சுரங்க திணைக்களத் தலைவரின் தன்னிச்சையான ஒப்பந்தத்தின் மூலம் கனிய மணல் அகழ்வதற்கான ஆராய்வு செய்வதற்கான அளவீடு நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறு கோரியே இந்த கவனயீரப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பிரதேச வாசிகள், சங்கங்களின் பிரதிநிதிகள், கடற்தொழில் மீன்பிடி சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு தங்களின் எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர்.

இதன்போது, "அழிக்காதே அழிக்காதே இயற்கை வளத்தை அழிக்காதே", "சுரண்டாதே சுரண்டாதே மக்களின் வாழ்வாதாரத்தை சுரண்டாதே", "அழிக்காதே அழிக்காதே சுற்றுலாத்துறையை அழிக்காதே", "மண் அகழ்வு ஒப்பந்தத்தை உடன் நிறுத்து" என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு விஜயம் செய்த குச்சவெளி பிரதேச செயலாளர் கே. குணநாதனிடம் குறித்த விடயத்தை ஜனாதிபதி, கிழக்கு ஆளுநர், மாவட்ட செயலாளர் ஆகியோர்களின் கவனத்துக்கு கொண்டு செல்லுமாறு கோரிய மகஜரினை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர். (அ)

# கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட நிந்தவூருக்கு ஹக்கீம் விஜயம்



நிந்தவூர், செப். 07

நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விஜயம்.

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், எச்.எம். ஹரிஸ், பைசல் ஹாசிம், முன்னாள் பாராளுன்ற உறுப்பினர் எம்.எல்.ஹிஸ்புல்லாஹ், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை ஆகியோர் சென்றியிருந்தனர்.

அண்மைக்காலமாக நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இக் கடலரிப்புக் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது அன்றாடா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை இங்கிருந்த தென்னை மரங்கள், மீனவர்களின் வாடிகள், மீன்பிடி உபகரணங்களும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நூல் வெளியீட்டு விழா



அம்பாறை, செப். 07

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் அனுசரணையில் சமூகவாதி எம்.ஐ.உதுமாலெவ்வை எழுதிய "நோயற்ற வாழ்விற்கு அறுசுவை விருந்து" எனும் நூல் வெளியீடும் அறிமுக விழாவும் கடந்த சனிக்கிழமை ஒலுவில் கிறீன் வாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற அதிபர் ஐ.எல். ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொழிலதிபர் எஸ்.எஸ்.எச்.முஸ்தபா நூலின் முதற் பிரதியை பிரதம அதிதி கலாநிதி எஸ்.எல்.றியாஸ் பெற்றுக் கொண்டார்.

அம்பாறை எச்.ஈ.ஓ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எச்.நிஹால் அஹமட் உட்பட அதிதிகள் மற்றும் கலந்து கொண்டனர். (அ)

# மருதமுனை அல்-மனாரில் போதை ஒழிப்பு கருத்தரங்கு





அம்பாறை, செப். 07

கல்முனை கல்வி வலயத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவச சட்ட ஆலோசனையும் மற்றும் போதைவஸ்துப் பாவனையின் விளைவுகள் பற்றியும் போதை ஒழிப்புப் பற்றியும் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வொன்று நேற்றுமுன் தினம் மருதமுனை அல் - மனார் தேசிய பாடசாலையில் க.பொ.த. உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இடம்பெற்றது.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு கல்லூரி அதிபர் யு.எல். உபைதுல்லா தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், வடக்குக் கிழக்கு மாகாண இலவச சட்ட ஆணைக்குழுவின் பணிப்பாளர் எம்.ரி.சபீர் மற்றும் சிரேஷ்ட உளநல மருத்துவர் வைத்தியர் யு.எல்.சராப்தீன் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பொத்துவில் பிரதேச மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

அம்பாறை, செப். 07

பொத்துவில் பிரதேச மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பொத்துவில் பிரதேச செயலகத்தில் பிரதேச எம்.ஐ.எம். பிர்னாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப், அம்பாறை மாவட்ட அரசாங்கதிபர் சிந்தக அபேவிக்ரம, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பீ.அனீஸ், மாகாண காணி உத்தியோகத்தர் முஸம்மில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் பொருட்டு 2023 வரவு -செலவுத் திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள்,



குறைந்த வருமானமுள்ள சமுர்த்தி பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் க.பொ.உயர்தரம் கற்பதற்கு சிப்தொர புலமைப்பரிசில் , விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு, பல கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 103 குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் என்பன அதிதிகளினால் வழங்கப்பட்டன. (அ)

# கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழு இந்தியா பயணம்!

திருமலை, செப். 07

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டானின் அறிவுறுத்தல்களுக்கமைவாக, 4 நாள் இந்தியா - மதுரைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர் தலைமையில் ஒரு குழுவினர் நேற்று முன் தினம் பயணமானர்.

இந்த விஜயத்தின்போது, இந்தியா - மதுரையில் அமைந்துள்ள மிக முக்கிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள் போன்ற பல இடங்களை பார்வையிட்டு அங்கு மேற்கொள்ளும் அபிவிருத்தி செயற்திட்டங்களை பார்வையிட்டு அது தொடர்பான விடயங்களை அறிந்துகொண்டு, கிழக்கு மாகாணத்தில் அந்த அபிவிருத்தி விடயங்களை எவ்வாறு அமுல்படுத்தி கிழக்கு மாணத்தை முன்னேற்றமடையச் செய்ய முடியும் என்பதற்கான கள விஜயமாக இது அமைந்துள்ளது.

இந்த விஜயத்தில், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி யு.கவிதா உள்ளிட்ட அதிகாரிகள் பயணமாகியமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைன் போரில் பயன்படுத்த ரஷ்யா வடகொரியாவிடம் ஆயுத கொள்வனவு

**இரு நாட்டு தலைவர்களும் பேசவுள்ளனர்**

லண்டன், செப். 07

**உக்ரைன் போரில் பயன்படுத்த வட கொரியாவிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதற்காக ரஷ்யா பேச்சு நடத்துவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**இது குறித்து பிரிட்டனிலிருந்து வெளியாகும் 'தி கார்டியன்' நாளிதழ் தெரிவித்துள்ளதாவது:**

**உக்ரைன் போர் காரணமாக மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.**

இந்த நிலையில், ஒன்றரை ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரில் ரஷ்யாவின் ஆயுத கையிருப்பு வேகமாகக் குறைந்து வருகிறது. அதனை ஈடுசெய்வதற்காக அந்த நாடு வட கொரியாவை அணுகியுள்ளது.

ஏற்கெனவே, வட கொரியாவிடமிருந்து பெறப்பட்ட வெடிபொருள்களை ரஷ்யா பயன்படுத்தி வருவதாகக் கூறப்படும் நிலையில், அந்த நாட்டிடமிருந்து எறிகணை குண்டுகள், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்முதல் செய்ய ரஷ்யா விரும்புகிறது.

இதற்காக, ஏற்கெனவே ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷாய்கு வட கொரியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

இந்தச் சூழலில், ரஷ்யாவுக்கு ரயில் மூலம் அடுத்த மாதம் வரவிருக்கும் வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன்னுடன் இது தொடர்பாக அதிபர் விளாடிமிர் புடின் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விவகாரத்தில் உடன்பாடு ஏற்பட்டால் ரஷ்யா, வட கொரியா ஆகிய இரு நாடுகளுமே பலனடையும். ஒப்பந்தத்தின் மூலம், சர்வதேச தடைகளையும் மீறி உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக ரஷ்யாவுக்கு குறைந்த விலையில் ஆயுதங்கள் கிடைக்கும் வட கொரியாவுக்கும் அதன் ஏவுகணை திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான நிதி கிடைக்கும்.

வட கொரியாவின் அணு ஆயுத திட்டங்களுக்கு எதிரான ஐ. நாவின் பொருளாதார தடைகளுக்கு இதுவரை ரஷ்யா முழு ஆதரவு அளித்து வந்தது.

ஆனால், உக்ரைன் போருக்கு பிறகு சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இரு நாடுகளுக்கும் இடையே தற்போது அதிகரித்து வரும் இராணுவ ரீதியிலான நெருக்கம் சர்வதேச அரசியலில் திருப்புமுனையை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

ஏற்கெனவே மேற்கத்திய 'ஆதிக்கத்துக்கு' எதிராக சக்தி வாய்ந்த சீனாவை ரஷ்யா அணி சேர்த்து வரும் நிலையில், 10 இலட்சத்துக்கும் அதிகமான வீரர்களைக் கொண்ட பலம் வாய்ந்த இராணுவத்தை கொண்ட வட கொரியாவும் அந்த அணியில் இணைவது வரவேற்கத்தக்கது அல்ல என்று 'தி கார்டியன்' நாளிதழ் தெரிவித்துள்ளது.

# ஜி -20 மாநாட்டு மண்டபத்தில் 28 அடி உயர நடராஜர் சிலை!



புதுடில்லி, செப். 07

"ஜி- 20 மாநாடு மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள நடராஜர் சிலை, நமது வளமான கலாசாரம் மற்றும் வரலாற்றின் கூறுகளை கண் முன்னே நிறுத்துகிறது" என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஜி-20 மாநாடு அரங்கத்தின் முகப்பில், தஞ்சாவூர் மாவட்டம் சுவாமி மலையை சேர்ந்த தேவசேனா சிற்பக் கூடத்தில், அஷ்ட தாதுக்களால் உருவாக்கப்பட்ட 28 அடி உயர நடராஜர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, பிரதமர் மோடி எக்ஸ் சமூகவலைதளங்களில் தமிழில் பதிவிட்டுள்ளார். அதில் பிரதமர் மோடி கூறியிருப்பவை வருமாறு,

"பாரத மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள பிரமாண்டமான நடராஜர் சிலை, நமது வளமான கலாசாரம் மற்றும் வரலாற்றின் கூறுகளை கண்முன்னே நிறுத்துகிறது. ஜி- 20 உச்சி மாநாட்டிற்காக உலக நாடுகள் ஒன்றுகூடும் போது, இது இந்தியாவின் பழங்கால கலைத்திறன் மற்றும் பாரம்பரியங்களுக்கு ஒரு சான்றாக அமையும் - என்றுள்ளது.

(ஐ)

# பிரேசிலை புயல் தாக்கியது; 21 பேர் பலி, பலர் பாதிப்பு!



பிரேசிலியா, செப். 07

பிரேசில் நாட்டை புயல் தாக்கிய நிலையில் கனமழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அத்துடன் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த அனர்த்தங்களில் சிக்கி 21 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலின் ரியோ கிராண்டே உ சுல் மாகாணம் புயலால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த புயல், கனமழை, வெள்ளத்தில் சிக்கி இதுவரை 21 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். கனமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

(ஐ)

# இந்தியாவுக்கு பாரத் என்று பெயர் மாற்றுவதற்கு திட்டம்?

**எதிர்க்கட்சிகள் பலவும் கண்டனம்**

புதுடில்லி, செப். 07

இந்தியாவின் பெயரை 'பாரத்' என்று மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜி -20 நாடுகளின் தலைவர்களுக்கு குடியரசுத் தலைவர் சார்பில் அனுப்பப்பட்டுள்ள அழைப்பிதழை சுட்டிக்காட்டி காங்கிரஸ் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 18ஆம் திகதி தொடங்கவுள்ள பாராளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரில் இதுதொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்த செயலுக்கு இந்தியாவின் எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

(ஐ)

# பூமியை ஒத்த கோள் புதிதாக கண்டறிவு!

ரோக்கியோ, செப். 07

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் நமது பிரபஞ்சத்தில் நட்சத்திரங்கள், கிரகங்கள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்படுகின்றன.

இந்நிலையில், ஜப்பான் ஆய்வாளர்கள் பூமியை ஒத்த கிரகம் ஒன்றை நமது சூரிய குடும்பத்துக்கு வெளியே - நெப்ரியன் கோளுக்கு அடுத்துள்ள பகுதியில் கண்டுபிடித்துள்ளனர்.

ஜப்பானின் ஒசாகாவில் உள்ள ஹூண்டாய் பல்கலைக்கழகத்தின் பாட்ரிக் சோபியா லிகாவ்கா மற்றும் ரோக்கியோவில் உள்ள ஜப்பானின் தேசிய வானியல் ஆய்வகத்தின் தகாஷி இடோ ஆகியோரின் சமீபத்திய ஆய்விலேயே இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கோள், இது பனி பொருட்கள் நிறைந்த ஹைபர் பட்டை என்று அழைக்கப்படும் இடத்தில் கண்டறியப்பட்டுள்ளது. இது 9ஆவது கிரகத்தை (நெப்ரியூன்) விட மிக அருகில் உள்ளது. ஆரம்பகால சூரிய குடும்பத்தில் இதுபோன்ற பல கோள்கள் இருந்ததால், இது ஆதி கோளாக இருக்க முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

ஹைபர் பட்டையில் மில்லியன்கணக்கான பனிக்கட்டி பொருட்கள் இருக்கின்றன என்று அறியப்படுகிறது, அவை நெப்டிரினுக்கு அப்பால் அமைந்துள்ளதால் அவை டிரான்ஸ் - நெப்டியூனியன் பொருட்கள் என குறிப்பிடப்படுகிறது. இவை சூரிய குடும்பம் உருவானதில் இருந்து எஞ்சியவை என்று வானியலாளர்கள் நம்புகின்றனர்.



அவை பாறை, உருவமற்ற கார்பன் மற்றும் நீர் மற்றும் மெதைன் போன்ற ஆவியாகும் பனிக்கட்டிகளின் கலவைகளால் ஆனவை. "டிரான்ஸ் - நெப்ரியூனியன் பொருட்களின் சுற்றுப் பாதைகள் வெளிப்புற சூரிய மண்டலத்தில் கண்டுபிடிக்கப்படாத கிரகம் இருப்பதைக் குறிக்கலாம்" என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது மிகவும் பெரியது என்பதால் தொலைதூர சுற்றுப்பாதையில் அமைந்துள்ளது என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இது நெப்ரியூனை விட சூரியனில் இருந்து 20 மடங்கு தொலைவில் சுற்றி வருகிறது. இருப்பினும் இன்று வரை வானியலாளர்கள் 9 கிரகம் இருப்பதாக மட்டுமே கூறியுள்ளனர்.

(ஐ)

# சனல் 4 காணொலி தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம்

## நளின் பண்டார கோரிக்கை

**கொழும்பு, செப். 07**

**சனல் 4 காணொலியில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணை அவசியம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கோரியுள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த விடயம் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும். ஏப்ரல் 21 தாக்குதலால் நாட்டு மக்கள் இன்னல்களுக்கு முகங்கொடுத்தது.

அதுமாத்திரமின்றி நாட்டின் தொழில்துறை மற்றும் சுற்றுலாத்துறை கடுமையாக பாதிக்கப்பட்டன.

முஸ்லிம் மக்கள் இன்னல்களுக்கு முகங்கொடுத்தனர். முஸ்லிம் மக்கள் பீதியுடன் வாழ்ந்து வந்தனர். பல பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டன.

இந்த தாக்குதலை அடுத்து முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையே நிலவிய சகோதரத்துவத்தில் விரிசல் ஏற்பட்டது.

எனவே சனல் 4 வெளியிடவுள்ள ஏனைய தகவல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம்-என்றார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் எனக் கோரினார்.



சனல் 4 காணொளியில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணை அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார்.

(அ)

# கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளினால் ஊழியர் சேமலாப நிதிக்கு பாதிப்பில்லை

## சபையில் கூறினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, செப். 07

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் எதிர்வரும் வாரத்தில் நிறைவு செய்யவேண்டும்.

நிறைவு செய்யாவிட்டால் அனைத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்படும் என்றும், நாட்டை மற்றவர்கள் பொறுபேற்க தயங்கிய நேரத்தில் நான் பொறுபேற்று நாட்டை கட்டியெழுப்பியுள்ளேன்.

மேலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. 9 வீதத்தை நிச்சயமாக தருவதாக நாங்கள் உறுதியளித்துள்ளோம்.



அந்த 9 வீதத்தையும் நான் தெரிவு செய்யவில்லை. கடந்த ஆட்சியில் தான் அதுவும் தீர்மானிக்கப்பட்டது ஆகவே அது பற்றி என்னிடம் பேச வேண்டாம்-என்றார்.

இந்த சபையின் தலைவர் இரண்டு தரப்பையும் பிரதிநித்துவப்படுத்துவதால் அவரிடம் கேளுங்கள்.

நான் அந்த விடயத்தில் தலையிட மாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

### ஆளுங்கட்சிக்குள் விரிசல்

# சஜித்துடன் இணையும் அசங்க நவரத்ன எம்.பி?

கொழும்பு, செப். 07

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்ள ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான அசங்க நவரத்ன, ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவருடன் பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன, முக்கிய கலந்துரையாடலை நடத்தியுள்ளதுடன், விரைவில் இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்புகளையும் வெளியிட உள்ளார்.

அசங்க நவரத்ன பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், இவர் இலங்கை மக்கள் கட்சியின் பொதுச் செயலாளருமாவார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சியில் ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபட்டு வருகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியுடன் பலகட்ட பேச்சுகள் இடம்பெறுள்ளபோதிலும் இன்னமும் இரு தரப்புக்கும் இடையில் இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை.

டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கவேண்டுமென்பதில் டலஸ் அணி உறுதியாக உள்ளதால் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து இழுபறிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆயினும், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகள் மற்றும் பல்வேறு சிவில் அமைப்புகளுடன் ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து பேச்சுக்களை மேற்கொண்டு வருகிறது. (அ)

# ராஜபக்ஷவினரை ஆட்சியில் அமர்த்த ஈஸ்டர் தாக்குதல் தேவைப்படவில்லை

## அமைச்சர் மகிந்தானந்த கூறுகிறார்

கொழும்பு, செப். 07

தென்னிலங்கை சிங்களத் தலைவர் ஒருவரை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதாக சனல் 4 தொலைக்காட்சி காணொளி மூலம் குற்றம் சுமத்துவதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ராஜபக்ஷவினரை ஆட்சிக்கு கொண்டு வர ஈஸ்டர் தாக்குதல் தேவைப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த தொலைக்காட்சி எப்போதும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவிருக்கும் தருணத்தில் காணொளியை வெளியிடும்.

காணொளியில் தகவல்களை வெளியிடும் நபர் சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள நபர்.2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அவரது வங்கிக் கணக்குகளுக்கு 700 லட்சம் ரூபா பணம் வந்துள்ளது.



தெஹிவளை பிரதேசத்தில் உள்ள வீடொன்றை அவர் 500 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார்.

2017 ஆம் ஆண்டு அவருக்கு கிடைத்த முதல் சம்பளம் 6 ஆயிரம் ரூபா மாத்திரமே. இந்த நபருக்கு எதிராக மோசடிகள் சம்பந்தமாக பொலிஸ் முறைப்பாடுகள் உள்ளன.

நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டு சென்று, அடுத்த தேர்தலில் மக்கள் நிலைப்பாடு ஒன்றை உருவாக்க இந்த நபர்கள் முயற்சித்து வருகின்றனர்.

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன 79 சத வீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றது.

ராஜபக்ஷவினரை ஆட்சிக்கு கொண்டு வர ஈஸ்டர் தாக்குதல் தேவைப்படவில்லை. 2019 ஆம் ஆண்டாகும் போது நாட்டில் நிலைப்பாடு உருவாகிவிட்டது.

சிங்கள பௌத்த தலைவரை ஆட்சிக்கு கொண்டு 9 முஸ்லிம் அடிப்படைவாதிகள் ஏன் தற்கொலை தாக்குதல் நடத்த வேண்டும்?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஏற்கனவே 720 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 70 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன-என்றார். (அ)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு ராஜபக்ஷவினரே பொறுப்பு!

கொழும்பு, செப். 07

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட தகவல்களை தாம் ஏற்றுக்கொள்வதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு ராஜபக்ஷவினரே பொறுப்பு என வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்தியப் புலனாய்வுப் பிரிவும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் உயர் மட்டத்தில் இருந்த அரசியல்வாதிகள் இது குறித்து அறிந்திருக்கவேண்டும்.

இதனை ஒரு சிறிய விடயமாகவே அவர்கள் கருதியிருந்தனர். ஆனால் இதுவொரு கோழைத்தனமான தாக்குதல் ஆகும். இந்த சம்பவம் இடம்பெற்ற போது மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூர் சென்றிருந்தார்.

ஒன்றரை நாள் கழிந்தே அவருக்கு இந்த சம்பவம் குறித்து தெரியவந்துள்ளது. பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறுவது சரியானதே. நான் அவரை மதிக்கிறேன்.

இந்த சம்பவத்துடன், முக்கிய அரசியல்வாதிகளுக்கு பெரிய தொடர்பு இருக்கின்றது. அதிகாரத்தை கைப்பற்ற ராஜபக்ஷர்கள் தெரிந்தே இந்த சதியை செய்துள்ளனர்.

மற்றவர்கள் இதற்கு துணை இருந்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட தகவல்களை நான் ஏற்றுக் கொள்கின்றேன். சில ஊடகங்கள் இதை சாதாரணமாக எடுத்துக்கொள்கின்றன.

எனினும், இதுவொரு மிகப் பெரிய பிரச்னை ஆகும். தவறு செய்திருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளவேண்டும். இதற்கு அஞ்சும் ஆள் நான் இல்லை.

அன்றைய அரச தலைவர்கள் ராஜபக்ஷவினரே இதற்கு முழுப் பொறுப்பு-என்றார்.

(அ)

## பத்திரிகையாளர்...

ஆவணப் படத்துக்கு SRI LANKA'S EASTER BOMBINGS: DISPATCHES எனப் பெயரிடப்பட்டுள்ளது.

47 நிமிடங்களும் 9 செக்கன்களையும் கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆவணப்படம், ஈஸ்டர் ஞாயிறு தின குண்டு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துகள் மற்றும் தாக்குதல் காட்சிகளுடன் ஆரம்பமாகிறது.

கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் மற்றும் பலரின் கருத்துகள் ஆவணப் படத்தில் இணைக்கப்பட்டுள்ளன. "அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காவும் நாட்டை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து கொள்வதற்காகவுமே குறித்த குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன", என அந்த ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளராக இருந்து தற்போது சுவிற்சர்லாந்தில் புகலிடம் கோரியுள்ளவரான ஆசாத் மௌலானா பல்வேறு தகவல்களை வெளியிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கையின் மூத்த புலனாய்வு தலைவர் ஒருவருக்கு தொடர்பு உள்ளதாக ஆசாத் மௌலானா "சனல் 4" வின் ஆவணப்படத்துக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

"இந்த தாக்குதல்கள் ஓரிரு நாட்களில் திட்டமிட்டு நடத்தப்பட்டதல்ல. இரண்டு மூன்று வருடங்களுக்கு மேல் முழுமையாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல். தாக்குதல் சம்பவம் தொடர்பில் மறுக்க முடியாத ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவைக் கொல்ல வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளார். அந்தச் சமயத்தில் லசந்தவை 'நாய்' என்று விளித்திருந்தார்.

மத தீவிரவாதத்தில் ஈடுபட்ட சிறைச்சாலை கைதிகளை சந்தித்து பேச்சு நடத்துமாறு பிள்ளையான் என்னிடம் கூறினார்.

அதற்கமைய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த சஹாரான் ஹாஷிமின் சகோதரர் மௌலவி சைனி ஹாஷிமை நான் சந்தித்தேன். மௌலவி சைனி ஹாஷிம் எமக்கு மிகவும் பயன்படுவார் என பிள்ளையான் என்னிடம் தெரிவித்தார்.

பிள்ளையானின் ஆலோசனையின் படி சட்டத்தரணி ஒருவரை நியமித்து சிறையில் இருந்த மௌலவி சைனி ஹாஷிமை பிணையில் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

பின்னர் 2018 ஜனவரி , அந்தக் குழுவிற்கும் அரச புலனாய்வு சேவையின் தற்போதைய தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு பிள்ளையான் எனக்கு கட்டளையிட்டார்.

அதன் பின்பு கடந்த 2018 பெப்ரவரி சுரேஷ் சாலேவுக்கும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சைனி ஹாஷிம் மௌலவிக்கும் இடையிலான கலந்துரையாடல் கரடிப்புவல் எனும் இடத்தில் தென்னந்தோப்பு ஒன்றில் அமைந்துள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலுக்கு சைனி ஹாசிம் மௌலவி உள்ளிட்ட ஆறு பேர் வெள்ளை வானில் குறித்த இடத்திற்கு வருகை தந்தனர்.

இக்கலந்துரையாடலில் சுரேஷ் சாலே, ராஜபக்ஷக்களால் நாட்டில் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாவதற்கு அதுவே ஒரே வழி எனவும் சுரேஷ் சாலே கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னர் அன்றைய தினம் காலை எனக்கு சுரேஷ் சாலேவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

தான் மட்டக்களப்பில் இருப்பதாகவும் என்னை உடனடியாக தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்குச் செல்லும்படியும் கூறினார். அங்கு நபர் ஒருவர் தங்கியிருக்கிறார் என்றும் அவரை உடனடியாக வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வெளியேறுமாறும் சுரேஷ் சாலே என்னிடம் கூறினார்.

மேலும் அந்த நபர் விரும்பும் இடத்தில் இறக்கிவிடுமாறு என்னிடம் சுரேஷ் சாலே கூறினார்.

நான் அவரை வாகனத்தில் ஏற்ற சென்ற வேளையில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது, அதனை தொடர்ந்து சிறிது நிமிடங்களில் அதாவது 8:50 மணியளவில் சஹ்ரானின் குழு உறுப்பினர் ஒருவருக்கும் தொலைபேசி அழைப்பு வந்தது.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் நான் பிள்ளையானுடன் பேசினேன். என்னை வாயை மூடி மௌனமாக இருக்குமாறு அவர் எச்சரித்தார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னணியையும் அனைத்து உண்மைகளையும் தெரிந்த என்னை கொலை செய்து விடுவார்கள் என அஞ்சி நான் இலங்கையை விட்டு வெளியேறினேன்", ஆஸாத் மௌலானா 'சனல் 4' ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டிலிருந்து தப்பிச் சென்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பது இதுவே, முதல் முறை என ஆஸாத் மௌலானா சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த ஆவண படத்தில் இலங்கையில் நடைபெற்ற யுத்தம் மற்றும் கடந்த 2005ம் ஆண்டு மகிந்த ராஜபக்ச நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றமை போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

யுத்தத்தின் போது ராஜபக்ஷக்களின் ஆட்சியின் கீழ் நடந்த பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் உள்ளடங்கிய காணொலிகளும் இடம்பெற்றுள்ளன.

குறித்த ஆவணப்படத்தில் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் குறித்தும் உண்மைத்தன்மையை முன்வைக்கின்றது.

ஆவண படத்தின் நிறைவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் உண்மைத்தன்மையை இலங்கை பாராளுமன்றத்தின் சிறப்புக் குழு விசாரணை நடத்தியதாக 'சனல் 4' தெரிவித்துள்ளது.

(ஐ)

## கொக்குத்...

தெரிவித்தார்.

நேற்றைய தினம் முன்னர் தோண்டப்பட்ட புதைகுழியிலுள்ள மண் வெளியே எடுக்கப்பட்டதுடன், அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணி நாளையும் (இன்றும்) தொடரும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு...

விளக்கமளித்தார். இதன்போது, செய்தியாளர்கள் "வடக்கு மாகாண ஆளுநர், நேர்மையான அதி காரிகளை பழிவாங்கும் நோக்கில் பதவியிறக்கம் வகையில் செயல்பட்டு வருகிறார். இது தொடர்பில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள னவா?", என்று கேட்டனர்.

இதற்கு பதிலளித்த விக்னேஸ்வரன் எம். பி.,

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸின் நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனவே, வெகுவிரைவில் வடக்கு மாகாண ஆளுநர் மாற்றப்படுவார் என்பது எனது கருத்து - என்றார். (ஐ)

# கண்ணீர் புகைக் குண்டு வீசி மாணவர் போராட்டம் கலைப்பு

கொழும்பு, செப். 07

பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை பிரயோகித்துள்ளனர்.

கொழும்பு கண்டி பிரதான வீதியில் பேராதனை பிரதேசத்தில் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்ட மாணவர்களை கலைக்கவே மீது கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டின் இலவக் கல்வி முறையை அழிக்கும் 'பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை ஒழிக்க வேண்டும்', 'மருத்துவப் பட்டங்களை விற்க வேண்டும்' என்று கூறப்படும் அம்ரசாங்கத்தின் சதிகளுக்கு எதிராகவேவும் மேலும் பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டக்காரர்களால் போக்குவரத்துக்கு ஏற்பட்ட இடையூறு காரணமாக பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி மேற்கொண்டு கலைத்தனர். (ஐ)

# 6,230 கிலோ பீடி இலைகளை கடற்படையினர் பிடித்தனர்!

கொழும்பு, செப். 07

இலங்கை கடற்படையால் கடந்த ஒகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 6,230 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின்போது, இந்த சம்பவங்கள் தொடர்பில் 9 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், மூன்று டிங்கி படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதன் மூலம் அரசாங்கத்திற்கு 37 மில்லியன் ரூபாய்க்கு மேல் வரி வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கடற்படை மதிப்பீடு செய்துள்ளது.

கடல் வழிகள் ஊடாக கடத்தப்படும் மற்றும் சட்டவிரோதமான பொருட்கள் வருவதைத் தடுக்கும் நோக்கில், நாட்டின் கரையோரப் பகுதிகளில் வழக்கமான தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் ரோந்துப் பணிகளை மேற்கொள்வதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

## 3மாதங்களில்...

தொனிப்பொருளில் அரசாங்க தக வல் திணைக்களத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## சமுர்த்தி...

இவ்வாறான 4 கொள்ளை சம்பவங்களுடன் அவருக்கு தொடர்பு உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர பகுதியில் வீடொன்றில் திருதப் பணிகள் இடம்பெற்றவேளை 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்களை திருடினார் என்று கூறப்படும் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார். கைதானவரால் திருடப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதான இருவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றங்களில் முற்படுத்தப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் கேவா வசந் தலைமையிலான பிரிவினரே இந்தக் கைதுகளை மேற்கொண்டிருந்தனர். (ஐ)

## தனிநாடு...

இது எங்களுக்கு மிகவும் கெடுதலான வருங்காலத்தைத் தரும் என்று நான் நம்புகிறேன். அரசியல்வாதிகளும் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறான அதிகாரிகளும் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

எங்களுடைய நிர்வாகம் சீர்குலைந்தால் எங்கள் வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகங்களும் சீர்குலையும். இவ்வாறு நிர்வாகம் சீர்குலைந்த ஓர் இனம்தான் சமஷ்டி வேண்டும் - தனிநாடு வேண்டும் என்று கோருகின்றது. இதற்கு ஏற்றவாறான தகைமைகள் எங்களுக்கு இருக்கிறதா என்பதை யோசிக்க வேண்டும். எங்களுடைய நாளாந்த கடமைகளை சரியாக செய்ய முடியாதவர்கள் தனிநாடு பெற்றோ அல்லது சமஷ்டி பெற்றோ நடத்த முடியாது. அதற்கேற்றவாறு, இப்போதே நாங்கள் எம்மை மாற்றி - தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தி - நிர்வாக சீர்திருத்தம் நடைபெற வேண்டும் - என்றார். (ஐ)

## மாலை...

மேலும், "பொதுச்செயலாளர் பதவியில் இருந்து என்னை நீக்கியுள் ளமை சட்டவிரோத நடவடிக்கை. இதனை சட்டரீதியில் எதிர்கொள்வேன். கட்சிக்கு எதிராக நான் சதி செய்யவில்லை.

தலைமைப் பதவியை கைப்பற்ற முற்படவும் இல்லை. அரசாங்கத்தின் பக்கம் சென்றவர்கள்தான் சூழ்ச்சி செய்கின்றனர்", என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## சனல்4...

நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

'ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின்' பின்னணியில் உள்ளதாகக் கூறப்படும் சதித்திட்டம் தொடர்பான அனைத்து உண்மைகள் மற்றும் நபர்கள் குறித்து, 'சனல் 4' அறிக்கைத் திட்டம் வெளிப் படுத்தியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் ஆணைக்குழுக் களின் அறிக்கைகள் இருந்தபோதிலும், உரிய விசாரணைகள் மேற்கொள்ளப் படாத விடயங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற நீதியான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சுயாதீனமாக, விசாரணையின் கீழ் உள்ள அனைத்து பொலிஸ் உயர் அதிகாரிகளின் சேவைகளும் விசாரணை முடியும் வரை இடைநிறுத்தப்பட வேண்டும்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான நிலந்த ஜயவர்தன மற்றும் தேசபந்து தென்னகோன் ஆகியோர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தாக்குதல் தொடர்பான உண்மைகளை அறிந்த அனைத்து பொலிஸ் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் வெளியில் வந்து உண்மையை வெளிப்படுத்துமாறு பேராயர் அழைப்பு விடுத்துள்ளார்.

"மீண்டும் ஒரு தெரிவுக்குழுவை நியமிப்பது நேரத்தையும் வளங்களையும் வீணடிக்கும் செயலாகும்" என்று அவர் மேலும் கூறினார்.

அத்துடன், உண்மை வெளிவர வேண்டும் என்று சகல தேவாலயங்களிலும் நாளை வெள்ளிக்கிழமை சிறப்பு பிரார்த்தனை நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக எனது பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது

## சனல்-4 குற்றச்சாட்டை நிராகரித்தார் பிள்ளையான்

கொழும்பு, செப். 07

**குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பு படுத்தி தன்னுடைய பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.**

**பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயித்த ஞாயிறு தற்கொலை குண்டுத்தாக்குதல் எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத தாக்குதல் சம்பவமாகும்.

குறித்த குண்டுத்தாக்குதலை ஐ.எஸ் அமைப்பினரே மேற்கொண்டனர் என அதன் தலைவர் தெரிவித்திருந்தார்.

ஐ எஸ் அமைப்பின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் அவர்கள் உரிமை கோரியிருந்தனர்.

தற்கொலை குண்டுத்தாக்குதல் எதற்காக மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பிலும் எந்த நோக்கத்திற்காக செய்யப்பட்டது என்பது தொடர்பிலும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் ஆஸாத் மௌலானா வெளிநாட்டில் தஞ்சம் கோருவதற்காக இதனை மறுபக்கம் திருப்புவதற்கு முயற்சிக்கிறார்.

மதத்திற்காக மரணிப்போம் என சத்தியபிரமாணம் செய்த சிலர் சிறையிலும் வெளியிலும் இருக்கின்றார்கள்.

அவர்களை மரணிப்பதற்கு ஊக்குவித்த சில மத நிறுவனங்களும், அரசியல் சக்திகள், மற்றும் சர்வதேச சக்திகள் காணப்படுகின்றன.

இதனை காப்பாற்றுவதற்கான ஆஸாத் மௌலானா மேற்கொண்டுள்ள பலத்த முயற்சியே சனல் 4 நிறுவனத்திற்கான சாட்சியமளிப்பாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மேலும் நாட்டில் மீண்டும் ஒரு அச்சுறுத்தலான சூழலை உருவாக்க முயற்சிக்கின்றார்களா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டுவரையிலான காலப்பகுதியில் நான் சிறைச்சாலையிலிருந்தேன்.

அவ்வாறு சிறைச்சாலையிலிருக்கும் போது எவ்வாறு இவ்வாறானதொரு குற்றத்தை இழைக்க முடியும்?

மேலும் ஆஸாத் மௌலானா போன்றவர்கள் தங்கள் வாழ்விற்காக காட்டிக்கொடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் சில தமிழ் அரசியல்வாதிகள் அதில் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர் - என்றார். (அ)

# ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியில் மோ. சைக்கிள்-டிராக்டர் விபத்து!

## இளைஞர்கள் இருவர் மரணம்!!



முல்லைத்தீவு, செப். 07

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த வீதியில் 21ஆவது கிலோமீற்றர் பகுதியில் வீதியில் தரித்திருந்த உழவியந்திரத்தின் பெட்டி மீது அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே விபத்து நிகழ்ந்திருப்பதாக தெரியவருகின்றது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர்.

வீதியில் உலரவிடப்பட்டிருந்த நெல்லை அள்ளுவதற்காக உழவியந்திரம் அந்தப் பகுதியில் தரித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் முள்ளியவளை, பொன்னகர் பகுதியைச் சேர்ந்த 23, 24 வயதுகளை உடைய இளைஞர்கள் இருவரே உயிரிழந்துள்ளனர்.

உழவியந்திரத்தின் உரிமையாளர் மற்றும் ஒருவர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சீனி விலை உயரலாம்?

கொழும்பு, செப். 07

இலங்கையில் சீனி விலை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் சீனியின் விலை கடந்த ஆறு ஆண்டுகளில் என்றும் இல்லாதவாறு கடுமையாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு மெற்றிக் தொன் சீனியின் விலை 3 வீதத்தினால் அதிகரித்து தற்போது 37,760 இந்திய ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 15 நாட்களுக்குள் இந்த விலை அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் கரும்பு விளைச்சல் அதிகமுள்ள பிரதேசங்களில் பருவமழை குறைவடைந்துள்ளமை, இருப்பு குறைவு காரணமாக சீனி விலை அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது, பண வீக்கத்தை அதிகரித்துள்ளதுடன், சீனி ஏற்றுமதிக்கு தடை விதிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனி உற்பத்தி வெகுவாக குறைவடையுமெனவும் எனவும், சீனியை குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு விரும்பவில்லை எனவும் சீனி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் சீனி ஏற்றுமதியை இந்தியா தடை செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே, சர்வதேச சந்தையில் சீனி விலை கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சுரேஷ் சாலேயை பதவி நீக்குக! பிள்ளையான் மீது விசாரணை!!

## ஜே. வி. பி. வலியுறுத்து



கொழும்பு, செப். 07

தேசிய புலனாய்வு பிரிவின் இயக்குநர் சுரேஷ் சாலேயை உடனடியாக பதவி நீக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள தேசிய மக்கள் சக்தி பிள்ளையானுக்கு எதிராக பக்கசார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியாகியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே தேசிய மக்கள் சக்தி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தேசிய புலனாய்வு பிரிவின் இயக்குநராக சுரேஷ் சாலே தொடர்ந்தும் பணியாற்றும் சந்தர்ப்பத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வது அர்த்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

சனல் 4 காணொலியில் மௌலானா தெரிவித்துள்ளது போல உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வர் பிள்ளையானிற்கும் சுரேஷ் சாலேக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அவர்கள் கோட்டாபயவுடன் காணப்படும் படங்கள் உள்ளன. பிள்ளையானுக்கு உள்ள தொடர்பை மௌலானவே வெளிப்படுத்தியுள்ளார்.

உண்மையான குற்றவாளிகள் இன்னமும் சுதந்திரமாக நடமாடுகின்றனர். விசாரணைகள் உரிய கோணத்தில் இடம்பெறவில்லை. தற்போது வெளிவந்துள்ள விடயங்கள் சூத்திரதாரிகள் மற்றும் நோக்கங்களை வெளிப் படுத்தியுள்ளன.

ஜனாதிபதியாக கோட்டாபய பதவியேற்ற உடன் சுரேஷ் சாலே புலனாய்வு பிரிவின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இதற்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கும் தொடர்பிருக்கவேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ தற்போது ஜனாதிபதி இல்லை. அவருக்கு விடுபாட்டுரிமை இல்லை என்பதால் அவர் குறித்த விசாரணைகளை மீள ஆரம்பிக்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# யாழில் சிறுமியின் கை அகற்றப்பட்டமைக்கு சுகாதார அமைச்சர் பொறுப்பேற்கவேண்டும்

## சாள்ஸ் நிர்மலநாதன் சபையில் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 07

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியசாலையில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அசம்பாவிதத்திற்கு சுகாதார அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு நிலவும் நிலையில் மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கமுடியாதுள்ளமையை அறிய முடியாதவராக சுகாதார அமைச்சர் காணப்படுகின்றார்.

கடந்த 2 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் தவறினால் 8வயதுடைய சாண்டில்யன் வைசாலினி எனும் சிறுமி கையை இழந்துள்ளார்.

குறிப்பாக அவர் காய்ச்சல் காரணமாக 26ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட நிலையில் தவறுதலாக ஏற்றப்பட்ட மருந்து காரணமாக அவரது கை சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. குறித்த சிறுமியின் கையை அகற்றியமையானது ஏற்றுக்கொள்ள முடியாது.



வைத்தியசாலையில் வைத்தியர்கள் சாதனை புரிந்தால் பெரிய விடயமாகக் கருதும் நீங்கள் அங்கு நடைபெறும் அசம்பாவிதத்திற்கும் பொறுப்பேற்க வேண்டும்.

எனவே இவ் விடயம் தொடர்பாக நீங்கள் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக இப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# தொடர்ந்து 12 வெற்றிகள் இலங்கை அணி சாதனை

கொழும்பு, செப். 07

ஆசிய கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

இதில் இலங்கை அணி இரு ஓட்டங்களால் த்ரில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி வரலாற்று சாதனையை பதிவு செய்துள்ளது. அதாவது ஒருநாள் போட்டியில் தொடர்ச்சியாக 12 போட்டிகளில் வெற்றி பெற்று பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்கா அணியின் சாதனையை சமன் செய்துள்ளது.

தென் ஆப்பிரிக்கா அணி இதனை இருமுறை செய்துள்ளது. பாகிஸ்தான் ஒருமுறை மட்டுமே இந்த சாதனையை படைத்துள்ளது. இலங்கை அணி முதன் முறையாக இந்த சாதனையை பதிவு செய்துள்ளது.

இந்த பட்டியலில் அவுஸ்திரேலியா தொடர்ச்சியாக 21 ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் இடத்தில் உள்ளது. (ஐ)

# இங்கிலாந்துடனான இருபது - 20; தொடரை சமப்படுத்தியது நியூசி.



பர்மிங்ஹாம், செப். 07

நியூசிலாந்து அணி 17.2 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி 4 இருபது - 20 மற்றும் 4 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றுள்ளது.

முதல் இரு இருபது - 20 போட்டிகளிலும் இங்கிலாந்தும், 3ஆவது இருபது -20 போட்டியில் நியூசிலாந்தும் வெற்றி பெற்றிருந்தன. இந்நிலையில், இரு அணிகளும் நான்காவது போட்டியில் நேற்றுமுன்தினம் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 175 ஓட்டங்களை அந்த அணி எடுத்தது. அதிரடியாக விளையாடிய பெயர்ஸ்ரோ 41 பந்துகளில் 73 ஓட்டங்கள் குவித்தார்.

இதையடுத்து, 176 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களமிறங்கியது. ஆரம்பம் முதலே நியூசிலாந்து அதிரடியில் மிரட்டியது. தொடக்க ஆட்டக்காரர் சைபர்ட் 32 பந்துகளில் 48 ஓட்டங்களும் கிளென் பிலிப்ஸ் 25 பந்துகளில் 42 ஓட்டங்களும் சாப்மேன் 25 பந்துகளில் 40 ஓட்டங்களும் குவித்தனர்.

இறுதியில், நியூசிலாந்து 17.2 ஓவரில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. அத்துடன் டி20 தொடரை 2-2 என சமனிலைப்படுத்தியது.

நியூசிலாந்து சார்பில் 3 விக்கெட் வீழ்த்திய மிட்செல் சான்ட்னருக்கு ஆட்ட நாயகன் விருது அளிக்கப்பட்டது. பெயர்ஸ்ரோவுக்கு தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது.

ஆசிய கிண்ண தொடர்:

# ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இலங்கை அணி த்ரில் வெற்றி!

லாகூர், செப். 07

ஆப்கானிஸ்தானின் கடும் போராட்டம் கைகூடாத நிலையில் 2 ஓட்டங்களால் த்ரில் வெற்றி பெற்ற இலங்கை அணி இலகுவாக சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியது.

ஆசியக் கிண்ண தொடரின் லீக் சுற்றில் நேற்று முன் தினம் இலங்கை, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. பாகிஸ்தானின் லாகூரில் நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் இலங்கை அணி 291/8 ஓட்டங்களை குவித்தது.



தொடக்க வீரர்களான பதும் நிஷங்க 41, திமுத் கருணரத்ன 32 என முதல் விக்கெட்டுக்கு 63 ஓட்டங்களை சேர்த்தனர். இதன்பின் ஆட வந்த குஷால் மெண்டிஸ் - அசலங்க ஆகியோர் இணைந்து நான்காவது விக்கெட்டுக்காக 102 ஓட்டங்களை சேர்த்தனர்.

அதிரடியாக ஆடிய மெண்டிஸ் 3 சிக்ஸர், 9 பௌண்ட்ரியுடன் 84 பந்துகளில் 92 ஓட்டங்களை விளாசிய நிலையில் ரஷீத் கானால் ரன்அவுட் செய்யப்பட்டார். அசலங்க 36, தனஞ்சய டி சில்வா 14, அணித் தலைவர் சானக 5 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

துனித் வெல்லாகே 33, தீக்ஷனா 28 ஆகியோர் கடைசி கட்டத்தில் நிலையாக ஆடி 8ஆவது விக்கெட்டுக்கு 64 ஓட்டங்களை சேர்த்தனர்.

இறுதியில் 291ஃ8 ஓட்டங்களை குவித்தது.

ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சில் குல்பதீன் நைப் அற்புதமாக பந்துவீசி 4-60 விக்கெட்களையும், ரஷீத் கான் 2-63 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

37.1 ஓவர்களில் வெற்றி இலக்கான 292 ஓட்டங்கள் எட்டினால்தான் சுப்பர் 4 பிரிவுக்கு தகுதி பெற முடியும் என்ற நிலையில் ஆப்கான் அணியினர் கடுமையாக போராடினர். தொடக்க துடுப்பாட்ட வீரர்கள் ரஹ்மனுல்லா 4, இப்ராஹிம் ஸட்ரன் 7 ஓட்டங்களுடன் வெளியேறினர். நைப் 22, ரஹ்மத் ஷா 45 ஓட்டங்களுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை நிலைப் படுத்தினர்.

அணித் தலைவர் ஹஸ்மத்துல்லா ஷாஹிதி 59 ஓட்டங்களையும், முகமது நபி அதிரடியாக ஆடி 5 சிக்ஸர், 6 பௌண்ட்ரியுடன் 32 பந்துகளில் 65 ஓட்டங்களையும், விளாசி வெளியேறினர். கரீம் ஜனத் 22, நஜிபுல்லா ஸட்ரன் 23, ரஷீத் கான் 27 என தங்கள் பங்குக்கு இறுதிவரை போராடினர்.

ஆனால், எதிர்முனையில் முஜிபுர் ரஹ்மான், ஃபஸல்லாக் பாருக்கி ஆகியோர் டக் அவுட் ஆகினர்.

37.4 ஓவர்களில் 289 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் ஆப்கானிஸ்தான் இழந்தது. இதனால், இலங்கை அணி இரு ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கையின் பந்துவீச்சில் கஸூன் ரஜிதா 4 விக்கெட்களையும் வெல்லாகே, தனஞ்செய டி சில்வா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் கரோலினா அரையிறுதியில்!

நியூயோர்க், செப். 07

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் கரோலினா முச்சோவா காலிறுதி சுற்றில் சொரானா சிர்ஸ்டியாவை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற ஆண்டின் இறுதித் தொடரான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் நியூயோர்க்கில் நடக்கிறது.

இதில், நேற்று நடந்த மகளிருக்கான காலிறுதி ஆட்டம் ஒன்றில் செக் நாட்டை சேர்ந்த கரோலினா முச்சோவா ருமேனிய நாட்டை சேர்ந்த சொரானா சிர்ஸ்டியாவை எதிர்கொண்டார்.

இதில் முச்சோவா 6-0 மற்றும் 6-3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவர் முதன் முறையாக அமெரிக்க ஓபன் தொடரின் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார். (ஐ)





# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் ஜொகோவிச் அரையிறுதியில்!

நியூயோர்க், செப். 07

ஜொகோவிச் 6-1, 6-4, 6-4 என்ற செற் கணக்கில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆண்டின் இறுதியில் நடக்கும் அமெரிக்க ஓபன் ரென்னிஸ் நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி போட்டியில் சேர்பியாவின் ஜொகோவிச், அமெரிக்காவின் ரெய்லர் பிரிட்சுடன் மோதினார்.

இந்த போட்டியில் ஜொகோவிச் 6-1, 6-4, 6-4 என்ற செற் கணக்கில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார். (ஐ)

# குயின்ரன் டி கொக் ஓய்வு



உலகக் கிண்ணத்துக்கு பிறகு ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தென்னாபிரிக்க வீரர் குயின்ரன் டி கொக் அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் அதிரடி தொடக்க வீரர் குயிரன் டி கொக். இவர் 2021 டிசெம்பரில் டெஸ்ட் கிரிக்கெட் டில் இருந்து ஓய்வு பெற்றார். இந்நிலை யில், இந்தியாவில் நடைபெறும் ஐ. சி. சி. உலகக் கிண்ணத்துக்குப் பிறகு ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார் என்று அறிவித்துள்ளார்.

தனது குடும்பத்துடன் நேரத்தை செலவிட வேண்டியதால் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். இருபது - 20 போட்டிகளில் அவர் தொடர்ந்தும் ஆடுவார்.

140 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ள அவர் 17 சதங்கள், 29 அரைச் சதங் களுடன் 44.85 சராசரியுடன் 5,966 ஓட் டங்களை எடுத்துள்ளார். விக்கெட் காப்பாளரான அவர் 183 பிடியெடுப்பு கள், 14 ஸ்ரொம்ப்கள் மூலம் 197 பேரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார். (ஐ)

சந்தீப் ராய்




# ஒரே நாடு ஒரே தேர்தல்: இந்திரா காந்தி நிராகரித்ததை மோடி முயற்சிப்பது ஏன்?

மும்பையில் எதிர்க்கட்சிகள் கூட்டணியின் மூன்றாவது கூட்டம் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது, அதே நாளில் முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் "ஒரே நாடு ஒரே தேர்தல்" நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய ஒரு குழுவை மத்திய அரசு அமைத்தது.

இதற்கு ஒரு நாள் முன்னதாக, செப்டம்பர் 18 முதல் 22 வரை நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை கூட்டுவதாக மத்திய அரசு அறிவித்தது, ஆனால் நிகழ்ச்சி நிரல் என்ன என்பது குறித்து அரசு எதுவும் தெரிவிக்கவில்லை. மத்திய அரசின் இந்த அறிவிப்புகள் குறித்தும், அரசின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து அரசியல் வட்டாரத்தில் எழுந்த யூகங்கள் குறித்தும், எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மத்திய பிரதேச முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் தலைவருமான கமல்நாத் கூறும்போது, "இது அரசியல் சட்ட திருத்தம் மட்டுமல்ல, இதற்கு மாநிலங்களின் ஒப்புதலும் தேவைப்படும். பாஜக ஆளும் ஹரியானா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் சட்டப்பேரவையை இப்படி கலைக்கலாம். ஆனால், பிற மாநிலங்களில் சட்டப்பேரவையில் காலத்தை இப்படி குறைக்க முடியாது" என்றார்.

மறுபுறம் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, "தற்போது குழுதான் அமைக்கப்பட்டுள்ளது. அதற்குள்ளாகவே இப்படி பதற்றம் அடைய வேண்டிய அவசியம் என்ன? குழு அமைக்கப்பட்டுள்ளது, பின்னர் அவர்களின் அறிக்கை தாக்கல் செய்யப்படும். நாளைக்கே இதை செய்துவிடுவோம் என்று நாங்கள் கூறவில்லையே" என இந்த விவகாரம் தொடர்பாக குறிப்பிட்டார்.

### மத்திய அரசின் நோக்கம் என்ன?

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆகஸ்ட் 11ஆம் தேதி முடிவடைந்தது. இந்நிலையில், திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் ஏன் கூட்டப்படுகிறது என்ற ஆச்சரியம் எழுந்துள்ளது. மிசோரம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இந்த ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது, அதன்பிறகு அடுத்த ஆண்டு மே-ஜூன் மாதங்களில் மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ளது.

இப்படிப்பட்ட நிலையில், இப்போது 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்ற பிரச்சினை ஏன் எழுப்பப்படுகிறது?

5 நாட்கள் நடைபெறும் சிறப்பு அமர்வில் சில முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்படலாம், மகளிர் இட ஒதுக்கீடு மசோதா போன்ற பிரச்னைகளும் இருக்கலாம் என அரசியல் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

ஆனால், மூத்த பத்திரிகையாளரும், அரசியல் ஆய்வாளருமான வினோத் சர்மா, இது ஒருவகையான "திசை திருப்பல்" என்று நம்புகிறார்.

### "பாஜக தன் மீது கவனத்தை திருப்ப முயல்கிறது"

சிறப்பு கூட்டத்தொடரின் ஐந்து நாள் அமர்வு குறித்து வினோத் ஷர்மா, "பொதுமக்களை வசீகரிப்பதற்காக இத்தகைய அரசியல் செய்யப்படுகிறது. புல்லட் ரயிலாகட்டும், பெரிய திட்டங்களின் அறிவிப்பாகட்டும் அல்லது உலகின் மிகப்பெரிய சிலையாகட்டும் அரசின் அறிவிப்பு பெரிதாக இருக்கும். ஆனால் அவற்றின் இலக்கு மிக குறுகியது.

ஒரே தேசம், ஒரே தேர்தல் என்பதை செயல்படுத்த அரசியல் சட்டத்தை நிறைய மாற்ற வேண்டிவரும். மேலும், இது கூட்டாட்சி அமைப்பின் மீதான தாக்குதல், எனவே, இந்த விவகாரம் நீதிமன்றத்திற்கு செல்லும். இதை தவிர்த்து இதன் பின்னணியில் பெரிய உள்நோக்கம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை." என குறிப்பிட்டார்.







'ஒரே நாடு, ஒரே தேர்தல்' தொடர்பான பாஜகவின் வியூகம் குறித்து வினோத் சர்மா கூறும்போது, "எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து சந்திப்பில் ஈடுபட்டு இருப்பதைக் கண்டு பாஜக அசௌகரியமாகி, தன்மீது கவனத்தை திருப்ப முயல்கிறது. எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து சந்திப்பு நடத்தும்போது, சிறப்பு கூட்டத்தொடர் பற்றி அறிவிக்கிறது, 'ஒரே நாடு ஒரே தேர்தல்' பற்றி பேசுகிறார்கள். ஆனால் அதன் பிறகு அமைதி நிலவுகிறது. சபாநாயகர் கூட அமைதியாக இருக்கிறார்" என தெரிவித்தார்.

மேலும், தற்போதைய அரசு அரசியலமைப்பு நடைமுறைகளை தனக்கு ஏற்ற வழியில் பயன்படுத்துவதில் விருப்பமாக இருக்கிறது. அதே நேரத்தில், தனக்கு இருக்கும் பொறுப்புக்கூறலைத் தவிர்த்து வருகிறது. அப்படி இல்லையெனில் சிறப்பு அமர்வின் நிகழ்ச்சி நிரல் என்ன என்பதை அரசு சொல்லியிருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

### செயல்முறைகள் எப்படி இருக்கும்?

'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பதை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல என்றும் மூத்த பத்திரிகையாளர் வினோத் சர்மா கூறுகிறார். அரசியலமைப்பில் பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். மாநிலங்களவை ஒப்புதல் பெறப்பட்டு, மாநில சட்டபேரவைகளை கலைக்க வேண்டும் என்கிறார் அவர்.

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் ஓ.பி.ராவத்




பேசும்போது, "இந்தப் பிரச்னை முன்பு எழுப்பப்பட்டது, அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட்டால் இது சாத்தியமாகும்" என்று கூறினார்.

அதே நேரத்தில், மூத்த பத்திரிகையாளர் பிரதீப் சிங், 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' சாத்தியம் என்றும், இதற்காக அனைத்து மாநில சட்டபேரவைகளையும் கலைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் நம்புகிறார்.

இது குறித்து அவர் கூறுகையில், "அரசியலமைப்பை திருத்துவதற்கு, இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்க வேண்டும். மக்களவையில் அரசுக்கு பெரும்பான்மை உள்ளது, மேலும் மாநிலங்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெற அரசாங்கம் முயற்சி செய்யலாம். ஜிஎஸ்டி விவகாரத்தில் செய்ததுபோல்" என குறிப்பிட்டார்.

ஆனால் அரசியலமைப்புத் திருத்தத்தைத் தவிர, குறைந்தபட்சம் பாதி மாநிலங்களின் சட்டப்பேரவைகளிலும் இந்த திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

"ஒரே நாடு ஒரே தேர்தலை நடைமுறைப்படுத்த 14 மாநிலங்களின் ஒப்புதல் தேவைப்படும், பாஜகவுக்கு இது கடினமானது அல்ல. 12 மாநிலங்களில் பாஜக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆட்சியில் உள்ளன. இரண்டு மூன்று மாநிலங்கள் ஆதரிக்க தயாராக இருக்கின்றன. ஒடிசாவிற்கும் ஆந்திராவிற்கும் இதில் எந்த வேறுபாடும் இல்லை. ஆனால், மாநிலங்களவையில் தான் சிக்கல் ஏற்படும்" என்று பிரதீப் சிங் கூறுகிறார்.

"காங்கிரஸ் ஆதரிக்காவிட்டால், மாநிலங்களவையில் இதனை நிறைவேற்றுவது கடினம். அதேநேரம், இந்த மசோதாவைக் கைவிட்டு, தேர்தலை சந்திப்பது என்பது காங்கிரசுக்கு கடினம்" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இதையெல்லாம் அரசு சமாளித்தாலும் மாநில சட்டப்பேரவைகள் கலைக்கப்படுமா என்ற கேள்வியும் எழும்.

இது குறித்து பிரதீப் சிங் கூறும்போது, "முன்னதாக இது தொடர்பாக இரண்டு திட்டங்கள் இருந்தன. ஒன்று, இரண்டு கட்டங்களாகச் செய்யப்பட வேண்டும். மக்களவைத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பும் பின்பும் நடைபெற வேண்டிய சட்டப்பேரவை தேர்தல்களை ஒன்றாக நடத்துவது. இரண்டாவது, பாஜக மற்றும் அதன் கூட்டணி அரசுகள் மாநிலங்களில் ஆட்சியை கைப்பற்றிவிட்டு பின்னர் ஆட்சியை கலைத்துக்கொள்ள வேண்டும், மீதமுள்ள மாநிலங்களின் அரசாங்கங்களை டிஸ்மிஸ் செய்ய வேண்டும். ஆனால், இதில் மீண்டும் ஒரு சட்டரீதியான சிக்கல் உள்ளது."

ஒரே நேரத்தில் மத்தியிலும் மாநிலங்களிலும் தேர்தலை நடத்த வேண்டும் என்றால், அதற்கு தேவையான வளங்களை எப்படி பயன்படுத்துவது என்பதும் சவாலானது. ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு அதிகமாக மின்னணு வாங்கு இயந்திரங்கள், வாக்கு ஒப்புகை சீட்டு இயந்திரங்கள் தேவைப்படும்.

நாட்டின் பல பகுதிகள் மிகவும் பதற்றமானவை, அங்கு தேர்தலை நடத்தும்போது கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவைப்படும். எனவே, ஒரே நாடு ஒரே தேர்தலை முன்னெடுத்து செல்வதற்கு முன்பு இந்த கேள்விகளுக்கெல்லாம் அரசு விடை தேட வேண்டும்.

### ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதால் யாருக்கு லாபம்?

"ஒரே நாடு, ஒரே தேர்தல்" என்பது இப்போது தொடங்கிய விஷயம் அல்ல. அதற்காக முயற்சிகள் 1983 ஆம் ஆண்டிலிருந்தே தொடங்கப்பட்டன, எனினும், இந்திரா காந்தி அதை நிராகரித்தார்" என்கிறார் மூத்த பத்திரிகையாளர் பிரதீப் சிங்.

ஆனால், நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்றதில் இருந்தே இந்தப் பிரச்னை மீண்டும் எழுந்துள்ளது. பாஜகவின் 2014 தேர்தல் அறிக்கையிலும் ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

"தேர்தல்களில் கறுப்புப் பணம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது, ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தினால், அது கணிசமாகக் குறையும். தேர்தல் நிதி திரட்டுவது என்பது கட்சிகளுக்கு மிகப்பெரிய சுமை. இதுபோன்ற சூழ்நிலையில் சிறிய கட்சிகள் பலன் பெறலாம், ஏனெனில் அவை சட்டபேரவை மற்றும் மக்களவை தேர்தல்களுக்கு தனித்தனியாக பிரசாரம் செய்ய வேண்டியதில்லை" என்று பிரதீப் சிங் கூறுகிறார்.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதன் மூலம் பாஜக, காங்கிரஸ் போன்ற பெரிய தேசிய கட்சிகள் இறுதியில் அதிக பலன் அடையும் என்று கூறப்படுகிறது. அதே நேரத்தில் பல மாநிலங்களில் சட்டப்பேரவை மற்றும் மக்களவைத் தேர்தல் பிரச்சாரங்களில் ஒரே நேரத்தில் ஈடுபடுவது சிறிய கட்சிகளுக்கு கடினமாக இருக்கலாம்.

"ஒரே நாடு ஒரே தேர்தல் மூலம் பாஜக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு கிடைக்கும் நன்மை என்னவென்றால், பிரதமருக்கு பிரச்சாரம் செய்ய நேரம் கிடைக்கும், மேலும் பிரசாரத்தில் அதிகம் கவனம் செலுத்த முடியும். பிரதமர் இன்னும் பிரபலமான முகமாக இருக்கிறார். ஒரே நாடு ஒரே தேர்தல் மூலம் அவர்கள் ஒவ்வொரு 6 முதல் 8 மாதங்களுக்கு ஒருமுறை வேர்வை சிந்தி பிரசாரம் செய்ய வேண்டியது இல்லை " என்று பிரதீப் சிங் கூறுகிறார்.

(16ம் பக்கம் பார்க்க)

# கொள்கை இணைவு இல்லாத அரசியல் கூட்டணிகள் நாட்டின் எதிர்காலத்துக்கு நம்பிக்கை தராது

எந்தவொரு எதிர்காலத் தேர்தலுக்கும் முன்னதாக அமைக்கப்படக்கூடிய அரசியல் கூட்டணிகள் குறித்து நிறைய செய்திகளை ஊடகங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. சாத்தியமான ஒழுங்கமைவுகள் மற்றும் இணைவுகள் குறித்து பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் வருகின்ற செய்திகள் பெருமளவுக்கு ஊகத்தனமானவையாக இருப்பதுடன் அரசியல் எதிராளிகள் மத்தியில் நிச்சயமற்ற தன்மையையும் பூசலையும் உருவாக்குவதற்கு திட்டமிட்டு பிரசுரிக்கப்படுபவையாகவும் காணப்படுகின்றன.

நாட்டின் நிகழ்வுப்போக்குகள் தொடர்பில் மக்களுக்கு அறியத்தரும் பெறுமதியான பணியைச் செய்வது ஒரு ஜனநாயகத்தில் ஊடகங்களின் பொறுப்பாக இருக்கின்ற அதேவேளை எந்தவொரு அடிப்படையும் இல்லாமல் ஊகத்தனமான செய்திகளை வெளியிடுவது ஏற்கெனவே இடர்பாட்டுக் குள்ளாகியிருக்கும் மக்களை எதிர்காலத் தேர்தல் ஒன்றில் அவர்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகள் தொடர்பில் குழப்பத்துக்குள்ளாக்க மாத்திரமே உதவும்.

இந்த ஊடகங்களின் செய்திகளில் பெருமளவானவற்றுக்கு சொந்தம் கொண்டாடுவோரோ அல்லது பொறுப்பு எடுப்பாரோ இல்லை. அத்தகைய தகவலுக்கான ஆதார மூலங்களும் அடையாளப்படுத்தப்படுவதில்லை. அந்த செய்திகளை எழுதும் பத்திரிகையாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டால் அவற்றின் நடுநிலையையும் நம்பகத்தன்மையையும் மக்கள் எடைபோடுவதற்கு பெரிதும் உதவும்.

பொருளாதாரத் துறையில் அரசாங்கம் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகள் மீது நாட்டின் கவனம் குவிந்திருக்கின்ற அதேவேளை அரசியல் களத்தில் நாடு எடுக்கும் திசை நீண்டகால நோக்கில் அதன் எதிர்கால மார்க்கத்தை தீர்மானிக்கும்.

1978 அரசியலமைப்பு கொண்டுவரப்படுவதற்கு முன்னதாக அரசியல் கட்சிகளுக்கு இடையிலான கூட்டுகள் (தேர்தலுக்குப் பிறகு அவற்றை பிணைத்துவைத்திருக்கக்கூடிய முக்கியமான கொள்கை அம்சம் எதுவும் இல்லாத வகையில்) பிரதானமாக போட்டித்தவிர்ப்பு உடன்பாடுகளாகவே இருந்தன. அவை நேரடியாக தொகுதி அடிப்படையிலான தேர்தலுடன் (First past the post electoral system) தொடர்புடையவையாகவே இருந்தன. அந்த தேர்தல் முறை அரசியல் கூட்டுக்களில் பிரதான கட்சி அரசாங்கத்தை அமைக்கக்கூடியதாக போதுமான ஆசனங்களை வென்றெடுப்பதை உறுதிசெய்தது. அரசாங்கத்தை அமைப்பதற்கும் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கும் பிரதான கட்சி அதன் நேசக் கட்சிகளில் தங்கியிருக்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

அத்தகைய போட்டித்தவிர்ப்பு உடன்பாட்டு ஏற்பாடுகளுக்கு விதிவிலக்குகளாக 1956 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் அமைந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம், 1965 ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்க தலைமையில் அமைந்த 7 கட்சிகளைக் கொண்ட தேசிய அரசாங்கம், 1970 ஆம் ஆண்டில் சிறிமா பண்டாரநாயக்க தலைமையில் அமைந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆகியவை இருந்தன.

மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொதுத்தேர்தலுக்கு முன்னதாக ஒன்றிணைந்த ஒரு கூட்டாக இருந்த அதேவேளை 1965 தேசிய அரசாங்கம் பொதுத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு கட்சிகளை ஒன்றிணைத்து அமைக்கப்பட்டது. அதன் விளைவாக அந்த அரசாங்கங்கள் கொள்கை அடிப்படையில் அமைந்தவையாக இருக்கவில்லை என்பதுடன் ஆரம்பம் முதலிருந்தே உட்பூசல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியும் இருந்தது.

> **இன்றைய சீரழிவில் இருந்து நாடு மீட்சிபெற வேண்டுமானால் அதை ஆட்சிசெய்ய ஆசைப்படுபவர்களிடம் உறுதியான கொள்கை நிலைப்பாடுகளும் கடமைப்பொறுப்பும் இருக்கவேண்டியது அவசியம். அவ்வாறு இல்லையானால் எந்தவொரு எதிர்காலத் தேர்தலினதும் விளைவுகள் எவ்வாறானவையாக அமைந்தாலும் 2 கோடி 20 இலட்சம் சனத்தொகையின் எதிர்காலம் நம்பிக்கையற்றதாகவே இருக்கும்.**

1970 ஐக்கிய முன்னணி அரசாங்கம் இதற்கு விதிவிலக்காக இருந்தது. பொதுத்தேர்தலுக்கு வெகு முன்னதாகவே சிறீலங்கா சுதந்திர கட்சி, லங்கா சமசமாஜ கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இடையில் ஏற்பட்ட கொள்கை இணக்கப்பாட்டின் விளைவாகவே அந்த அரசாங்கம் அமைக்கப்பட்டது. உண்மையில் இரு வருடங்களுக்கும் மேலாக அங்கத்துவக் கட்சிகளுக்கிடையில் தீவிரமான பேச்சுவார்த்தைகளின் விளைவாக தயாரிக்கப்பட்ட பொதுவேலைத்திட்டம் 1970 பொதுத்தேர்தலுக்கு முன்னதாக கண்டி போகம்பரை மைதானத்தில் 1968 ஆம் ஆண்டு மக்கள் முன்னிலையில் வைக்கப்பட்டது. அந்த கூட்டணியினால் எந்த உட்பூசலும் இன்றி 1975 வரை நாட்டை ஆட்சி செய்யக்கூடியதாக இருந்தது. அதற்கு பிறகு முரண்பாடுகள் தோன்றி இறுதியில் அடுத்த பொதுத்தேர்தலில் சுதந்திர கட்சி, சமசமாஜ கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி படுதோல்வியடைந்தன.

1978 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் பெரும்பாலான கட்சிகள் தேர்தலைச் சந்திப்பதற்கு அல்லது தேர்தலுக்குப் பிறகு அரசாங்கத்தை அமைப்பதற்கு ஏதோ ஒரு வடிவிலான கூட்டணிகளிலேயே தங்கியிருக்கவேண்டியிருந்தது. இதற்கு காரணம் 1978 அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழ் தேர்தல் ஒன்றில் எந்தவொரு தனிக்கட்சியும் அரசாங்கத்தை அமைக்கக்கூடியதாக வெற்றிபெற முடியாது என்ற நம்பிக்கையாகும்.

1994 ஆம் ஆண்டில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கம் பெருமளவுக்கு முன்கூட்டிய கொள்கை இணக்கப்பாடு இல்லாமல் அவசர அவசரமாக கட்சிகளை ஒன்றிணைத்து அமைக்கப்பட்டது என்றாலும் அந்த அரசாங்கத்தினால் அதன் முழுப்பதவிக்காலத்துக்கும் நின்றுபிடிக்கக்கூடியதாக இருந்தது. அதற்கு பிரதான காரணம் 1994 ஜனாதிபதி தேர்தலில் திருமதி குமாரதுங்கவுக்கு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மக்களால் வழங்கப்பட்ட மாபெரும் ஆணையேயாகும். 2005 ஆம் ஆண்டிலும் 2010 ஆம் ஆண்டிலும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கங்களும் பிறகு கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான (2020) அரசாங்கமும் பல்வேறு கட்சிகளின் கூட்டணியாகும்.

2015 நல்லாட்சி அரசாங்கமும் கொள்கை அடிப்படையிலான கருத்தொருமிப்பு இல்லாமல் அவசரமாக பல்வேறு கட்சிகளை ஒன்றிணைத்து அமைக்கப்பட்டதாகும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது என்ற வாக்குறுதியே அந்த அரசாங்கத்தில் சகல கட்சிகளையும் ஒன்றுபடுத்தி வைத்திருந்தது. ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கனவே வண. மாதுளுவாவே சோபித தேரரினால் பிரபல்யப்படுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், அது அரசாங்கத்தை ஒன்றாக வைத்திருக்கப் போதுமானதாக இருக்கவில்லை. விரைவாகவே வெடிப்புகள் கிளம்பத் தொடங்கிவிட்டன. அதனால் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவது என்ற வாக்குறுதியையோ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது என்ற வாக்குறுதியையோ அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாமல் போனது.

கொள்கை இணைவு இல்லாத அரசியல் கூட்டணிகள் தொடர்பிலான நாட்டின் கடந்தகால அனுபவங்களின் பின்புலத்தில் நோக்கும்போது முக்கியமான கொள்கை விவகாரங்களில் முன்கூட்டியே இணக்கப்பாடு இல்லாமல் அமையக்கூடிய அத்தகைய கூட்டணிகளினால் எந்தவொரு எதிர்காலத் தேர்தலுக்கும் பின்னர் நாட்டை முன்னோக்கிவழி நடத்த முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

அரசியல் கட்சிகள் மத்தியில் கொள்கைக் கருத்தொருமிப்புக்கான தேடல் பல சவால்கள் நிறைந்ததாக இருக்கிறது. இதற்கு காரணம் குறிப்பாக அந்த கட்சிகளில் பலவும் தனிநபர்களும் நாடு எதிர்நோக்கும் முக்கியமான பிரச்னைகளில் சிலவற்றில் கடுமையான வேறுபாடுகளையுடைய நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன.



**ஜாவிட் யூசுவ்**

நாடு அதன் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பவேண்டுமானால் அந்த பொருளாதாரம் எந்த வடிவத்தை எடுக்கவேண்டும் என்பது தொடர்பில் அரசியல் சமுதாயத்திற்குள் வேறுபாடுகள் நிலவுகின்றன. அதிகாரம் பரவலாக்கப்படவேண்டுமா என்பது தொடர்பிலும் அவ்வாறு பரவலாக்கப்படுவதானால் எந்த அளவுக்கு என்பது தொடர்பிலும் வேறுபாடுகள் காப்படுகின்றன.

பொறுப்புக்கூறல் பிரச்சினைகள் குறிப்பாக போரின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பிலும் கோட்டாபய அரசாங்கத்தின் பொருளாதாரத் தோல்வி தொடர்பிலும் பிரச்சினைகள் இருக்கின்றன.

முடிவு காணப்படாத பல குற்றச்செயல்கள் உட்பட சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டியிருக்கிறது. உதாரணத்துக்கு லசந்த விக்கிரமதுங்க, வாசிம் தாஜூதீன் ஆகியோரின் கொலைகள் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை கூறலாம். இது விடயத்தில் கட்சிக்கு கட்சி வேறுபட்ட நிலப்பாடுகள் உள்ளன.

நாட்டின் சாபக்கேடாக அமைந்திருக்கும் ஊழல் என்ற புற்றுநோயை ஒழிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கு ஒரு சில கட்சிகளே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

எதிர்காலத் தேர்தல்களில் வெற்றிபெறக்கூடியதாக கூட்டணிகளை அமைப்பதற்காக மேற்கூறப்பட்ட பிரச்னைகளை எல்லாம் பற்றி விரிவாகப் பேசுவதைத் தவிர்ப்பது அதிகாரத்தில் அமர்த்தப்பட்டதும் வெற்றிகரமான ஆட்சிமுறையை உறுதிப்படுத்துவதற்கு போதுமானதல்ல. இன்றைய சீரழிவில் இருந்து நாடு மீட்சிபெற வேண்டுமானால் அதை ஆட்சிசெய்ய ஆசைப்படுபவர்களிடம் உறுதியான கொள்கை நிலைப்பாடுகளும் கடமைப்பொறுப்பும் இருக்கவேண்டியது அவசியம். அவ்வாறு இல்லையானால் எந்தவொரு எதிர்காலத் தேர்தலினதும் விளைவுகள் எவ்வாறானவையாக அமைந்தாலும் 2 கோடி 20 இலட்சம் சனத்தொகையின் எதிர்காலம் நம்பிக்கையற்றதாகவே இருக்கும்.

(சண்டே ரைம்ஸ், 3 செப்டெம்பர் 2023)

# தயாசிறியின் பதவி பறிப்பு



கொழும்பு, செப். 07

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டுள்ளார்.

பதவிநீக்க கடிதம் நேற்றுமுன்தினம் இரவு கிடைத்ததாக தயாசிறி தெரிவித்தார்.

அத்துடன், அவரின் கட்சி உறுப்புரிமையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளராக கடமை யாற்றிய சரத் ஏக்கநாயக்க, அக்கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் தயாசிறி ஜயசேகர பங்கேற்றிருந்தார்.

கட்சி இனி ஒற்றுமையாக பயணிக்கும் எனவும் கூறி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தயாசிறி வழக்கு தாக்கல்

கொழும்பு, செப். 07

சுதந்திரக்கட்சியில் இருந்து நீக்கப்பட்டமைக்கு எதி ராக அதன் முன்னாள் பொதுச் செயலாளரான தயாசிறி ஜயசேகர நேற்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

கட்சியில் இருந்து தன்னை நீக்க , கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி, நேற்று பிற்பகல் சட்டத்தரணி ஒருவரின் ஊடாக வழக்கை தாக்கல் செய்தார் என தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகம் மூடப்பட்டுள்ளதுடன் அதன் வாயில் கதவும் பூட்டுப் போட்டு மூடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதை அடுத்து, அந்த கட்சிக்குள் அரசியல் ரீதியான பிரச்னைகள் ஏற்பட் டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தயாசிறிக்கு ஆதரவான கட்சியின் தொண்டர்கள் கட்சியின் தலைமையகத்தை முற்றுகையிடலாம் என்ற காரணத்தினால், அதனை மூட தீர்மானிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# தேசிய போட்டிக்கு தெரிவான விபுலானந்தா ஹொக்கி அணி!



காரைதீவு, செப். 07

கல்வி அமைச்சு நடத்தும் தேசிய பெருவிளையாட்டு போட்டிக்கு கிழக்கு மாகாண சாம்பியனான காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின்(தேசிய கல்லூரி) ஹொக்கி அணி தெரிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மாகாணமட்ட இறுதிப்போட்டியில் அம்பாறை டி எஸ் சேனநாயக்க தேசிய பாடசாலை ஹொக்கி அணியை எதிர்த்து விளையாடிய காரைதீவு விபுலானந்தா அணி மூன்றுக்கு இரண்டு என்ற கோல் அடிப்படையில் மாகாண சம்பியனாக தெரிவாகியிருந்தது.

பாடசாலை அதிபர் மயில்வாகனம் சுந்தரராஜன் வெற்றி பெற்ற வீரர்களையும் பயிற்றுவித்தவர்களையும் பாராட்டினார்.

2023 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட பெருவிளையாட்டு போட்டிகளில் ஹொக்கி சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டியில் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அணியை 1:0 என்று கணக்கில் வெற்றி பெற்ற காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அணி இரண்டாம் அரை இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி வித்யாலயத்தினை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க தேசிய பாடசாலை அணியினரை மூன்றுக்கு இரண்டு என்ற அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

அணியினர் 2023 ஆம் ஆண்டுக்கான மாகாணமட்ட பாடசாலை போட்டியில் மாகாண சாம்பியன் பட்டத்தினை தனதாக்கிக் கொண்டனர். (அ)

# ஒரே நாடு ஒரே தேர்தல்:

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**ஒரே நாடு ஒரே தேர்தல் - கோரிக்கை எப்போது தொடங்கியது?**

சுதந்திரத்துக்குப் பிறகு நடைபெற்ற முதல் தேர்தலில் ஒரே நேரத்தில் மக்களவைக்கும் சட்டப்பேரவைகளும் தேர்தல் நடத்தப்பட்டது. இதற்குப் பிறகு, 1957, 1962 மற்றும் 1967 ஆகிய ஆண்டுகளில் மக்களவை, சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் நடத்தப்பட்டன.

1983 ஆம் ஆண்டு, இந்திய தேர்தல் ஆணையம், அப்போதைய இந்திரா காந்தி அரசிடம் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் திட்டத்தை முன்வைத்தது.

இது தொடர்பாக பிரதீப் சிங் கூறும்போது, “1999ல், ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த, சட்ட கமிஷன் பரிந்துரைத்தது. 2014ல், பா.ஜ., தனது தேர்தல் அறிக்கையில், அதற்கான வழியை கண்டுபிடிப்பதாக கூறியிருந்தது. அதன் பின், 2016ல், பிரதமர் மோடி, ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவது குறித்து பேசினார். அடுத்த ஆண்டு, நிதி ஆயோக் இதற்கான திட்டத்தை வகுத்தது. 2018-ஆம் ஆண்டு சட்ட ஆணையம், முழு தயாரிப்புக்குப் பிறகு, ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு ஐந்து அரசியலமைப்பு திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று கூறியது. 2019-இல் மோடி மீண்டும் வெற்றி பெற்றபோது, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அவர் கூட்டினார். இதனை காங்கிரஸ் மற்றும் பிற எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன” என்றார்.

“2022 ஆம் ஆண்டில், நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்தத் தயாராக இருப்பதாக தேர்தல் ஆணையம் கூறியது. 2022 டிசம்பரில், சட்ட ஆணையம் அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து அவர்களின் கருத்தை கேட்டது. உண்மையில், அரசாங்கம் இதற்காக நீண்ட நாட்களாக தயாராகி வருகிறது” என்றும் அவர் கூறுகிறார். ●

